

தமிழ் வருஷப்பிறப்பன்று ஆரம்பம்
T.R.மஹாலிங்கம் · குமாரி ருக்மணி
T.R.ராமச்சந்திரன் · K.மஹாதேவன்
பேபி கமலா · கிருஷ்ணன் · மதுரம்
ப்ரகதி
ஸ்ரீ வள்ளி
G.H.RAO
டைரக்ஷன்: AV.மெய்யப்பன் & A.T.கிருஷ்ணஸ்வாமி



சீக்கியர்கள்—தேநீர் அருந்தும் நேரம்

சீக்கியர்களிடம் உள்ள திடத்திற்கும் ஊக்கத்திற்கும் முக்கிய காரணம் அவர்கள் உணவில் ஏற்படுத்தியுள்ள கட்டுப்பாடுதான். உணவைக் கட்டுப்படுத்தினாலும் தேநீர் அருந்துவதை அவர்கள் தள்ளிவிடவில்லை.

சீக்கியர்கள் நடைமுறைக்கு ஒத்த பழக்கங்களையே அனுசரிப்பார்கள். எனவே, அவர்களுடைய பழக்க வழக்கங்கள் எல்லாம் அனுபவத்தில் தேர்ந்து எடுக்கப்பட்டவை. கண்ணை மூடிக் கொண்டு செய்ததையே திரும்பத் திரும்பச் செய்யும் வழக்கம் அவர்களிடம் கிடையாது. தேநீர் அருந்தும் பழக்கத்தை அவர்கள் ஏற்படுத்திக் கொண்டார்களானால், அது சுறுசுறுப்பும் வீரமும் கலந்த அவர்கள் வாழ்க்கைக்கு மிகவும் பொருத்தமானது என்பது தெரிகிறதல்லவா?

இந்தியாவின் வடக்கேயுள்ள அவர்கள் தாய் நாட்டிலோ ஒன்று அசாத்தியமான உஷ்ணமாயிருக்கும்; அல்லது தாங்க முடியாத குளிராயிருக்கும். இந்த சீதோஷ்ண நிலையில் இதத்தைக் கொடுப்பது சூடான தேநீர்தான் என்பதை அவர்கள் நன்கு உணர்ந்து இருக்கிறார்கள். இங்கு சூடான தேநீர் சாதாரணமாகப் பால் சீனியுடன் கலந்து விநியோகிக்கப்பட்டுப் பித்தளை லோட்டாக்களில் குடிக்கப்படுகிறது. கோடைக் காலத்தில், குளிர்மையையும், உத்சாகத்தையும் கொடுப்பது தேநீர்; குளிர் காலத்தில், குளிரிலிருந்து அவர்களைப் பாதுகாப்பதும் தேநீரே.

சீக்கியர்களை இந்தியா எங்கும் நீங்கள் காணலாம்; எட்டாக்கையிலுள்ள கிராமங்களிலும் கூடப் புத்தம் புதிய ப்ரூக் பாண்ட் டீயானது சீக்கியர்கள் பரவியதைக் காட்டிலும் அதிகமாக வியாபித்திருக்கிறது.

ப்ரூக் பாண்ட்

"இரு இலையும் ஒரு மொட்டும்"



பர்மாவின் மத்திய பாகத்தில்

[illegible] 80 000 [illegible]

[illegible]

[illegible]



[illegible]



[illegible]

முடிவான வெற்றிபெற முந்துங்கள்

[illegible]



ஸன்லைட் சோப் காய்ச்சும் மற்றொருவன் சொல்லுகிறான் . . .

❝ 'சுயசக்தி'யே சுயமாக வெளுக்கும் நுரையின் இரகசியம். இந்த சக்திதான் ஆடைகளிலிருந்து தானாகவே அழுக்கைப் போக்க உதவுகிறது. சுய சக்தி வாய்ந்த சோப்பானது அழுக்கைத் தொட்டவுடன் அதைப் பற்றிக் கொள்ளுகிறது. ஆடைகளை ஸன்லைட் சோப்பின் நுரையில் நனைத்துப் பிறகு தண்ணீரில் அலசினவுடன் நுரையோடு அழுக்கும் போய்விடுகிறது. ❞



ஸன்லைட் சோப்

சுயமாக வெளுக்கும் நுரை உடையது

S. 00-33 TM

ஒரு லீவர் பிரதர்ஸ் தயாரிப்பு

கல்கி
பொருளடக்கம்

மலர் 4 | இதழ் 36 — **1945 ஏப்ரல் 15** — பார்த்திப ௵ | சித்திரை 3

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.

★



★

தமிழ் நாட்டில் தமிழ் மொழிக்கே முதன்மை ஸ்தானம் இருக்க வேண்டுமென்று நாம் சொல்கிறோம். அதற்காகப் பிற பாஷைகளின்மேல் நமக்குத் துவேஷம் கிடையாது. பிற பாஷைகளைக் கற்கவே கூடாதென்பதும் நமது கொள்கையல்ல. ஒன்றிரண்டு வேறு பாஷைகளும் தெரிந்திருந்தால், தமிழை இன்னும் நன்றாக அநுபவிக்கலாம்.

அதுமாதிரியே கர்நாடக சங்கீதத்தைப் போல் உயர்ந்த சங்கீதம் கிடையாதென்பது நமது நிர்மானமான கொள்கை. அதற்காக வேறு சங்கீதத்தைக் கேட்கக் கூடாதென்று கிடையாது. வேறு சங்கீத முறைகளில் சிறிது அநுபவம் இருந்தால் கர்நாடக சங்கீதத்தை இன்னும் நன்றாய் அநுபவிக்கலாம்.

ஆனால் அவ்விதம் வேறு சங்கீதத்தைக் கேட்கும்போது, மட்டமானதைக் கேட்டால் நமது ரஸிகத்தன்மையும் மட்டமாய்ப் போய்விடும். ஹிந்துஸ்தானி சங்கீதம் கேட்பதாயிருந்தால், அதில் மிக உயர்ந்ததையே கேட்கவேண்டும். இந்தக் கொள்கையை மயிலை சங்கீத சபையார் வெகு நன்றாக அநுஷ்டித்து வருகிறார்கள். சென்ற வருஷத்தில் ஸ்ரீமதி கேஸரிபாயை அழைத்து வந்தார்கள். இந்த வருஷத்தில் அவர்களுடைய வருஷாந்திர விழாவுக்குக் காலஞ்சென்ற பிரசித்தி பெற்ற மகா வித்வான் அப்துல்கரீம்கானின் பிரதம சிஷ்யையான ஸ்ரீமதி ஹீராபாய் பரோட்காரைத் தருவிக்கிறார்கள். நாளது ஏப்ரல் 15உ மாலை ஸ்ரீமதி ஹீராபாய் மயிலை பி. எஸ். ஹைஸ்கூல் ஹாலில் கச்சேரி செய்கிறார்.

மிக இனிமையான சாரீரத்துக்கும் உயர்தரமான சங்கீதத்துக்கும் வட நாட்டில் மிகவும் பிரசித்தி யடைந்தவர் ஸ்ரீமதி ஹீராபாய் பரோட்கார். அதிலும் "பஜன்கள்" பாடுவதில் இணையற்றவர். ரேடியோவிலும் இசைத்தட்டிலும் பலர் கேட்டிருப்பார்கள். 15உ நேரிலும் கேட்டுப் பார்க்கலாம்.

கல்கி

மலர் 4 } தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் { இதழ் 36

என்ன சேதி?

புது வருஷம்

வெள்ளியன்று பிறந்திருக்கும் பார்த்திப வருஷம் தமிழ் மக்களுக்கு எல்லாவிதத்திலும் மங்கள வருஷமாக விளங்க வேண்டுமெனப் பிரார்த்திக்கிறோம். புது வருஷத்தில் தமிழர்கள் சகல சௌபாக்கியங்களையும் அடையட்டும். தமிழ் மொழி சிறந்து வளரட்டும். தமிழ் மொழிக்குத் தொண்டு செய்யும் இருக் கூட்டத்தாரின் முயற்சிகள் வளர்ந்தோங்கட்டும். தமிழ் நாட்டிலுள்ள தேசத் தொண்டர்கள் ஒருவரையொருவர் தாக்காமலிருக்கட்டும். அவர்களுக்குள் சிநேகபாவம் வளரட்டும். தமிழ் நாட்டில் தமிழர் சுயாட்சி செலுத்தும் நாள் நெருங்கி வரட்டும். "வெற்றி யெட்டுத் திக்கு மெட்டக் கொட்டு முரசே!" என்று தேசிய மகா கவியின் வாக்கு உண்மையாகட்டும்.

ஜின்னாவுக்கு ஓய்வு

சென்ற சில வருஷகாலமாக இந்திய முஸ்லிம்களின் ஒப்பற்ற தலைவராய் விளங்கிவரும் ஜனாப் ஜின்னா வேலை மிகுதியினால் தேக நலம் குன்றி மூன்று மாதம் ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியம் நேரிட்டிருப்பது அறிந்து வருந்துகிறோம். "என் உடம்புக்குப் பலவீனத்தைத் தவிர வேறொன்றுமில்லை. ஓய்வுதான் தேவை!" என்பதை ஜனாப் ஜின்னா தமது அறிக்கையில் வற்புறுத்திக் கூறியிருக்கிறார். ஜனாப் ஜின்னாவுக்கு வேறொன்றுமில்லாவிட்டாலும், அவருடைய பலவீனமே நமக்கு வேண்டிய கவலை அளிப்பதற்குப் போதுமானது. முக்கியமாக, தேசத்தில் அரசியல் நெருக்கடிகளும் சிக்கல்களும் அதிகமாகி வரும் இந்தச் சந்தர்ப்பத்தில், அந்த நெருக்கடிகளையும் சிக்கல்களையும் தீர்ப்பதற்குப் பெரிதும் அவசியமான முஸ்லிம் சமூகத் தலைவர் பலவீனமடைந்து மலை வாசத்துக்குப் போக நேர்ந்தது பற்றி எப்படிக் கவலைப்படாமலிருக்க முடியும்?

பிடிவாதத்தின் பலன்

ஜனாப் ஜின்னாவின் கட்சி தேசத்தில் பெரிதும் பலவீனம் அடைந்திருக்கும் சமயத்தில் அவருடைய தேகத்தின் பலவீனமும் சேர்ந்து கொண்டிருப்பது குறிப்பிடத் தக்கதாகும். காங்கிரஸ் வாதிகள் மாகாண சர்க்கார்களைக் கை நழுவ விட்ட காலத்திலிருந்து ஜனாப் ஜின்னாவின் கட்சி தேசத்தில் நாளுக்கு நாள் பலம்பெற்று வந்தது. சமரசப் பேச்சுக்காக மகாத்மா காந்தி ஜனாப் ஜின்னாவைத் தேடிப் போனபோது, முஸ்லிம் லீக் தலைவரின் பலமும் செல்வாக்கும் உச்ச நிலையை யடைந்திருந்தது என்று சொல்லலாம். அச்சமயம் ஜனாப் ஜின்னா உச்சாணிக் கிளையிலிருந்து கொஞ்சம் கீழிறங்கி வந்து சமரசம் செய்து கொண்டிருந்தால், தேசம் இதற்குள்ளாக விடுதலை அடைந்திருக்கும். ஜனாப் ஜின்னா அப்படிச் சிறிதும் வளைந்து கொடாததால் தேசம் பெரும் நஷ்டம் அடைந்தது. அதைப்போலவே ஜனாப் ஜின்னாவும் பெரும் நஷ்டத்தை அடையப் போகிறார் என்று அன்றைக்கே நாம் சொன்னோம். அந்தப்படியே (அதாவது நாம் சொன்னதற்காக அல்ல-காரண காரியம் என்ற இயற்கை நியதிப்படி) அன்று முதல் ஜனாப் ஜின்னாவின் பலமும் செல்வாக்கும் நாளுக்குநாள் தேசத்தில் குன்றி வந்திருக்கின்றன.

பலம் பெருகட்டும்

ஜனாப் ஜின்னாவைத் தேடி மகாத்மா சென்றபோது ஐந்து மாகாணத்தில் முஸ்லிம் லீக் மந்திரிகள் ஆட்சி செலுத்தி வந்தார்கள். அவ்வளவு மந்திரிகளும் ஜனாப் ஜின்னாவின் தலைமையைப் பரி

பூரணமாக ஒப்புக்கொண்டு காரியங்களை நடத்தி வந்தார்கள். ஆனால் இப்போதைய நிலைமை என்ன ?

எல்லைப்புற மாகாணத்தில் முஸ்லிம் லீக் மந்திரி சபை வீழ்ந்து காங்கிரஸ் மந்திரி சபை ஏற்பட்டு விட்டது.

சிந்து மாகாணத்தில் ஜனாப் ஜின்னா இட்ட கட்டளையை நிறைவேற்றி வந்த மந்திரி சபை வீழ்ந்து, காங்கிரஸ் ஆதரவு கொண்டு நடைபெறும் மந்திரி சபை நடந்து வருகிறது.

அஸ்ஸாமிலும் அதேமாதிரி காங்கிரஸ் கட்சியின் செல்வாக்குக்கு உட்பட்ட மந்திரி சபை ஏற்பட்டு விட்டது.


இதெல்லாவற்றுக்கும் சிகரமாக, வங்காளத்தில் ஸர் நாஜிமுதீனின் லீக் மந்திரி சபை தொபுகடீரென்று விழுந்து, அதற்குப் பதிலாக 93-வது பிரிவின் யதேச்சாதிகார ஆட்சி ஏற்பட்டு விட்டது.

அம்மம்மா ! என்ன வீழ்ச்சி ! எத்தகைய வீழ்ச்சி !

இதையெல்லாம் ஜனாப் ஜின்னா தமது மலைவாச ஓய்வின்போது சிந்தித்துப் பார்ப்பாராக. சிந்தித்துப் பார்த்து, மனதைத் தெளிவுபடுத்திக் கொண்டு மகாத்மாவுடனும் காங்கிரஸுடனும் சமரசம் செய்து கொள்வது என்ற தீர்மானத்துடன் திரும்பி வருவாராக. மேற்படி தீர்மானத்தை அவர் செய்தவுடனே, தேசத்தின் பலம் வளரும்; லீக்கின் பலமும் வளரும்; ஜனாப் ஜின்னாவின் தேக நிலைமையும் நிச்சயமாக அபிவிருத்தி யடைந்து விடும்.

நாமக்கல் கவிஞர் நிதி

நாமக்கல் கவிஞர் நிதிக்குப் பணம் கொடுக்க விரும்பும் அன்பர்களும், பணம் வசூலிக்க விரும்பும் அன்பர்களும் பலர் "அதற்கு அளிக்கப்பட்ட அவகாசம் போதாது" என்று தெரியப்படுத்தியதின் பேரில், அவர்களுடைய விருப்பத்துக் கிணங்க, கவிஞருக்குப் பணமுடிப்பு அளிக்கும் தேதியைத் தள்ளிப் போட்டிருக்கிறது. ஆனால் ரொம்ப நாள் தள்ளிப்போடுவதாக உத்தேசமில்லை யென்று அறிகிறோம். அப்புறம் ஆறின கஞ்சி பழைய கஞ்சியாகி விடும் என்பதைக் கவிஞரின் அன்பர்களுக் கெல்லாம் ஞாபகப்படுத்துகிறோம். கூடிய சீக்கிரத்தில் அவரவர்களுடைய அன்பைச் செயலில் காட்டும்படி கேட்டுக் கொள்கிறோம்.




புது வருஷத்தில் நூல் நூற்க ஆரம்பியுங்கள்!

[ஜூலை மாதத்திலிருந்து, பணத்துடன் கைராட்டை நூலும் சேர்த்துக் கொடுத்தால்தான் கதர் வாங்க முடியும் என்பதை நினைவூட்டுகிறோம்.]

புது வருஷக் கனவு- நிகழ்ச்சிச் சித்திரம்



-உம்மன்


ஸான் பிரான்ஸிஸ்கோ மகாநாட்டுக்குச் செல்லும் இந்தியப் "பிரதிநிதிகள்" லண்டனில் பாடம் ஊட்டப் படுகின்றனர்.
அதிகாரவர்க்க போதனை
ஸான் பிரான் ஸிஸ்கோ.
உலக மகாயுத்தம் 3
ஸான்பிரான்ஸிஸ்கோவில் கூடப் போகும்
மகாநாட்டின் முக்கியமான பிரதிநிதிகள்
இவர்கள்தான் என்று அபிப்பிராயம்
உறுதிப்பட்டு வருகிறது.

இதோ வந்துட்டுது!

வருவார் வருவார் என்று வழி பார்த்திருக்கிறார்கள் திரளான ஜனங்கள்.

வரும் வரும் என்று வானத்தை நோக்குகிறார்கள் கணக்கற்ற மக்கள்.

உச்சி வானத்தைப் பார்க்கிறார்கள்; மேற்கே வான முகட்டைப் பார்க்கிறார்கள்; நாலாபுறமும் கண்ணைக் கொட்டாமல் பார்க்கிறார்கள். மூச்சு விடாமலும் பார்க்கிறார்கள்.

"ஐயோ! ஆகாச மார்க்கம் இப்போதெல்லாம் அபாயகரமாயிற்றே!" என்று பெருமூச்சு விடுகிறார் ஒருவர்.

திடீரென்று நிச்சப்தம்.

"அதோ!" என்று ஒரு குரல்.

"இதோ வந்துட்டுது!" என்று இன்னொரு குரல்.

மேற்கு வான முகட்டில் ஒரு வெள்ளைப் புள்ளி.

வர வர அது பெரிதாகிறது.

தலைக்கு மேலே வருகிறது!

ஐயோ! தலை கீழாக விழுகிறதே!

எல்லாருக்கும் ஒரு கணம் பிராணன் போய்விட்டுத் திரும்பி வருகிறது.

தலைகீழாகக் கீழிறங்கிய ஆகாச விமானத்தினின்று வைஸ்ராய் வேவல் குதிக்கிறார்.

ஆயிரம் பத்திரிகை நிருபர்களும் பதினாயிரம் போட்டோக்காரர்களும் சுற்றிக் கொள்கிறார்கள்.

ஒரு லட்சம் குரல்கள் "ஜே!" "ஜே!" என்று ஒலிக்கின்றன.

"என்ன கொண்டு வந்தீர்கள்?" என்று இரண்டு லட்சம் குரல்கள் கேட்கின்றன.

வைஸ்ராய் வேவல் தலைத் தொப்பியை எடுத்துத் தடவிப் பார்க்கிறார்.

சட்டைப் பைக்குள் ஒவ்வொன்றாய்க் கையை விட்டுத் தேடுகிறார்.

கடைசிச் சட்டைப் பையிலிருந்து அவருடைய கை வெளியில் வரும்போது, அதில் ஏதோ ஒரு வஸ்து இருக்கிறது. கூட்டத்தில் மகத்தான 'ஹா ஹா'காரம்!

"அது என்ன?" என்று பல குரல்கள்.

அது இந்தியாவின் சுதந்திரந்தானா? வேவல் நிஜமாகவே கொண்டு வந்துவிட்டாரா?

வேவல் தம் கையில் உள்ள பொருளைத் தூக்கிப் பிடிக்கிறார்.

அப்படியும் அது என்னவென்று தெரியவில்லை.

வேவல் அந்த அபூர்வ வஸ்துவைத் தம் வாயில் வைத்துக் கொள்கிறார்.

பக்கத்தில் நிற்கும் மெய்க்காப்பாளர் ஒருவர் நெருப்புக் குச்சியைக் கிழித்து அதில் பற்ற வைக்கிறார்.

ஆஹா! தெரிந்துவிட்டது! வைஸ்ராய் வேவல் இந்தியாவுக்குக் கொண்டு வந்த அபூர்வமான பொருள், பெயரும் புகழும் பெற்ற அந்தப் பிரசித்தமான சர்ச்சில் சுருட்டுத்தான்!

அடாடா! அதன் புகைதான் என்ன ஜோராய், சுருள் சுருளாய், நாலு புறமும் நறு மணத்தைப் பரப்பிக் கொண்டு வட்டமிட்டுக் கிளம்புகிறது!

ஆஹா! சர்ச்சில் சுருட்டின் மகிமை அபாரந்தான்!

• • •

சற்று நேரத்துக்கெல்லாம் அந்த விஸ்தாரமான ஆகாச விமான மைதானத்தில் கூடியிருந்த திரளான ஜனங்கள் அவ்வளவு பேரும் கலைந்து போனார்கள். போகும்போது ஒருவருக்கொருவர், "இந்தியாவின் சுதந்திரத்தை வேவல் கொண்டுவரப் போவதில்லை என்று நான்தான் அப்போதே சொன்னேனே?" என்றும், "அதைத்தானே நானும் சொன்னேன்!" என்றும் பேசிக்கொண்டு சென்றார்கள்.

இது இந்த மாதிரிதான் முடியப் போகிறது என்று முன்னாலேயே அறிந்திராதவர்கள் அந்தப் பெருந்திரளான கூட்டத்தில் யாருமே இல்லையென்று தெரிந்தது. ஆனபோதிலும் அவ்வளவு பெரிய கூட்டம் அங்கே எதற்காகக் கூடிற்று என்பது மட்டும் பெரிய விந்தையாயிருந்தது.

அந்த மர்மம் எந்தப் பத்திரிகையிலும் வெளியாகவே இல்லை!

இந்தியாவின் அரசியல் பிரச்னையைப் பற்றி வழக்கமாக ஜோசியம் கூறுகிறவர்களுக்குச் சமீப காலத்தில் மூன்று காரியங்கள் பெரிதும் கருகருப்பை அளித்திருந்தன. அவற்றில் ஒன்று, ஸப்ரூ சமரசக் கமிட்டியாரின் பிரதிப் பிரயோஜனத்தை எதிர் பாராத நிஷ்காம்ய கர்மமான முயற்சி; இரண்டாவது, புலாபாய் — லியாகத் — வேவல் அந்தரங்க சம்பாஷணைகள்; மூன்றாவது, வைஸராய் வேவலின் லண்டன் விஜயம்.

மேற்படி மூன்று காரியங்களில் ஒன்று பூர்த்தியாகி, விஷயமும் வெளியாகி விட்டது.

ஸப்ரூ கமிட்டியின் சிபார்சுகள் வெளியாகி விட்டன. இந்தச் சிபார்சுகள் இருவகைப் பட்டவை. ஒன்று, இந்திய அரசியல் பிரச்னையைத் தாற்காலிகமாகத் தீர்த்து வைப்பதற்கு யோசனை சொல்கிறது. இன்னொன்று, இந்திய அரசியல் திட்டத்தை நிரந்தரமான முறையில் அமைப்பதற்கு யோசனை சொல்கிறது.

ஸப்ரூ கமிட்டியைச் சேர்ந்த பிரமுகர்கள் எல்லாம் மகா மகா மகா பெரியவர்கள்; நிதானஸ்தர்கள்; ஒரு பிரச்னையைப் பற்றி யோசிக்கும்போது அதன் மேற் பக்கம், கீழ்ப் பக்கம், முன் பக்கம், முதுகுப் பக்கம், உட் பக்கம், வெளிப் பக்கம் எல்லாவற்றையும் ஆராய்ந்தே முடிவு செய்யக் கூடிய பொறுப்பு வாய்ந்தவர்கள்.

அப்பேர்ப்பட்டவர்கள் செய்திருக்கும் சிபார்சுகளை நாம் கண்ணை மூடிக் கொண்டு ஒப்புக்கொள்ளவும் காட்டின இடத்தில் கையெழுத்துப் போடவும் தயாரா யிருக்கிறோம்.

இந்தியாவில் உடனே ஜனப் பிரதிநிதிகளால் நடத்தப்படும் பொறுப்பாட்சி ஏற்படுவதில் நமக்குச் சிறிதும் ஆட்சேபம் இல்லை. இப்போதுள்ள அரசியல் சட்டத்தை மாற்றிவிட்டு அவ்விதம் செய்தாலும் சரிதான்; மாற்றாமலே செய்தாலும் நமக்கு ஒன்றுதான்.

இந்தியா இன்றைக்கும் நாளைக்கும் என்றென்றைக்கும் ஒரே தேசமாக ஐக்கிய பாவத்துடன் இமய மலையைப் போல் வளர்ந்து உயர்ந்து ஓங்கி நிற்பதில் நமக்குக் கொஞ்சமும் ஆட்சேபம் இல்லை; ரொம்ப சந்தோஷந்தான்.

'சாதி ஹிந்துக்கள்' எனப் படுவோருக்கும் முஸ்லிம்களுக்கும் சமமான ஸ்தானங்கள் கொடுக்கப்படுவதிலும் நமக்குச் சிறிதும் ஆட்சேபமில்லை.

இப்போதுள்ள அரசியல் முறை மாறி உடனே பொறுப்பாட்சி ஏற்படுவதற்காக நாம் எதை வேண்டுமானாலும் ஒப்புக் கொள்ளத் தயார். "ஏதாவது குற்றம் குறை இருந்தால் அதைப் பிற்காலத்தில் வருவோர் சீர்திருத்திக் கொண்டு போகிறார்கள்" என்ற நம்பிக்கையுடன் இப்பிரச்னைக்கு எந்த ஏற்பாட்டையும் நாம் ஒப்புக் கொள்ளச் சித்தமா யிருக்கிறோம்;— அதன் காரணமாக, இந்தியாவின் இப்போதைய யதேச்சாதிகாரம் மாறுவதா யிருந்தால்!

ஆனால், மேற்படி ஸப்ரூ கமிட்டி சிபார்சுகள் காரியத்தில் நிறைவேறும் என்பதற்கு ஏதேனும் அறிகுறி இருக்கிறதா என்று பார்க்க வேண்டும்.

ஸப்ரூ கமிட்டி சிபார்சுகள் அமுலுக்கு வரவேண்டுமானால் அதற்கு இரண்டு நிபந்தனைகள் நிறைவேற வேண்டும்.

1. அவற்றை பிரிட்டிஷ் சர்க்கார் ஒப்புக்கொள்ள வேண்டும்.

2. முஸ்லிம் லீக் தலைவர்கள் ஒப்புக் கொள்ளவேண்டும்.

பிரிட்டிஷ் சர்க்கார் மட்டும் ஒப்புக் கொண்டாலும், முஸ்லிம் லீக்கைப் புறக்கணித்துச் சிபார்சுகளை அமுலுக்குக் கொண்டுவந்து விடலாம்.

முஸ்லிம் லீக் மட்டும் ஒப்புக் கொண்டாலும், தேசத்தின் பலத்தைத் திரட்டி பிரிட்டிஷாரை ஒப்புக்கொள்ளும்படி கட்டாயப் படுத்தலாம்.

ஆனால், துரதிர்ஷ்டவசமாக மேற்படி சிபார்சுகள் யாரும் ஒப்புக்கொள்ளாத அநாதைப் பிள்ளையின் கதியையே அடையுமென்று நாம் அஞ்சுகிறோம்.

* * *

இரண்டாவது, இந்திய அரசியல் ஜோசியர்களை ரொம்பவும் கலக்கிய விஷயம் புலாபாய்-லியாகத் சம்பாஷணை. இந்தச் சம்பாஷணையின் போக்கும் அதன் முடிவும் இந்தக் காலத்து மாபெரும் அந்தரங்கங்களில் ஒன்றாக இருந்து வருகிறது. "அப்படி ஒரு சம்பவம் கிடையவே கிடையாது. சம்பாஷணையும் நடக்கவில்லை; ஒப்பந்தமும் ஏற்படவில்லை; வேவலிடமும் செல்லவில்லை!" என்பவர்களும் இருக்கிறார்கள். இப்படிச் சந்தேகத்துக் கிடமாயிருக்கும் அந்தரங்க விஷயத்தைப் பற்றி நாமும் இடத்தை வீண் செய்யாமல் மேலே செல்வோம். ஒரு வேளை உண்மையாகவே சம்பாஷணை நடந்திருந்து, ஒப்பந்தமும் ஏற்பட்டிருந்து, அதை பிரிட்டிஷ் சர்க்காரும்

ஒப்புக் கொண்டு அமுல் நடத்துவதாயிருந்தால், நமக்கு ஒன்றும் ஆட்சேபமில்லை. அதையும் தாற்காலிகமாக ஒப்புக் கொள்ளத் தயாராயிருக்கிறோம். தேசம் ஒப்புக்கொள்ள வேண்டும் என்றும் சிபார்சு செய்கிறோம்.

ஏனெனில், இப்போதுள்ள நிலைமையைக் காட்டிலும் வேறு எதுவுமே மோசமாயிருக்க முடியாதல்லவா?

* * *

மூன்றாவதாக, வேவலின் லண்டன் விஜயம் பாக்கியிருக்கிறது.

உண்மையில், வேவல் எதற்காகத்தான் இங்கிலாந்துக்கு இப்போது பறந்து போயிருக்கிறார்? ஜப்பானுடன் நடத்த வேண்டிய தீவிர யுத்தத்துக்கு முஸ்தீபு செய்யத்தான் போயிருக்கிறாரா, அல்லது இந்தியாவின் அரசியல் பிரச்னையிலும் கவனம் செலுத்தி ஏதாவது ஏற்பாடு செய்யப் போயிருக்கிறாரா?

வைஸ்ராய் வேவல் போகும்போது நம்மிடம் இதைப்பற்றி ஒன்றும் சொல்லிவிட்டுப் போகவில்லையென்பதை வருத்தத்துடன் குறிப்பிடுகிறோம்.

ஆனாலும் ஒன்று நாம் சொல்ல முடியும்.

இந்தியாவின் அரசியல் பிரச்னையைத் தீர்த்து வைக்க பிரிட்டிஷார் பிரயத்தனம் செய்வதற்கு இப்போது ஒரு தகுதியான சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது.

அதாவது, பிரிட்டிஷாருக்குத் தகுதியான சந்தர்ப்பம்.

ஏனென்றால், யுத்தத்தில் ஜயிக்க வேண்டுமென்று கவலைப்படும் நிலைமையை அவர்கள் இப்போது தாண்டி விட்டார்கள். ஐரோப்பாவில் யுத்த முடிவு நெருங்கி விட்டது.

ஜெர்மனியின் முறியடிப்புக்குப் பிறகு அமெரிக்காவின் பூரண பலமும் ஜப்பான் மீது பிரயோகிக்கப்படும்.

போதாததற்கு ருஷ்யாவும் ஜப்பானுடன் செய்து கொண்டிருந்த நடுநிலைமை ஒப்பந்தத்தை சமீபத்தில் ரத்து செய்து விட்டிருக்கிறது.

இனிமேல், யுத்தத்தில் ஜயம் கிடைப்பதைப் பற்றி பிரிட்டிஷாருக்குக் கவலை கிடையாது.

இனி, அவர்களுடைய கவலையெல்லாம் உலகத்து அரசியலில் பிரிட்டனுடைய அந்தஸ்தைப் பற்றியதுதான்.

ஸான்பிரான்ஸிஸ்கோ மகாநாடு கூடப்போகிறது; அதைத் தொடர்ந்து இன்னும் பல சமரச மகாநாடுகள், சமாதான மகாநாடுகள், ஆயுதப் பரிஹார மகாநாடுகள், உலகப் புனருத்தாரண மகாநாடுகள், மறுமலர்ச்சி மகாநாடுகள், தொழில்விருத்தி மகாநாடுகள், பொருளபிவிருத்தி மகாநாடுகள் எல்லாம் நடைபெறுகின்றன. இந்த மகாநாடுகளில் எல்லாம் பிரிட்டனுக்கு உயர்ந்த அந்தஸ்து இருக்க வேண்டும்.

இந்த யுத்தம் ஆரம்பித்த பிறகு பிரிட்டனுடைய அந்தஸ்து அமெரிக்காவுக்கும் ருஷ்யாவுக்கும் கீழே போய் விட்டது. அவ்விதம் யுத்தத்தின்போது இழந்துவிட்ட முதன்மை ஸ்தானத்தைச் சமாதான மகாநாடுகளின் போது இராஜ தந்திரத்தினால் திரும்பப்பெற வேண்டும்.

இந்தியாவின் அரசியல் பிரச்னை தீராதிருக்கும் வரையில், உலக மகாநாடுகளில் பிரிட்டனுடைய அந்தஸ்துக்கு அது ஒரு இடையூறாயிருக்கும்.

என்னதான் ஸர் ராமசாமி முதலியார்களும், ஸர் பிரோஸ்கான் நூன்களும் போனாலும், "நாங்கள் சுதந்திர இந்தியாவின் பிரதிநிதிகள்" என்று நெற்றியில் பட்டம் எழுதிக் கட்டிக்கொண்டு போனாலும், அதெல்லாம் சுகப்படாது.

ருஷ்யாவுக்கோ, அமெரிக்காவுக்கோ பிரிட்டனுடன் எந்தவிதமான தகராறு நேர்ந்தாலும், உடனே அவர்கள் இந்தியாவைச் சுட்டிக் காட்டிக்கொண்டிருப்பார்கள். மற்றச் சின்னஞ்சிறு நாடுகள் பிரிட்டனைப் பற்றி அவமதிப்பாய்ப் பேசும். பிரிட்டனை நம்பி ஏமாந்து போன சிறுநாடுகள் இந்தியாவைக் குறிப்பிட்டு பிரிட்டன்மேல் பழி தீர்த்துக் கொள்ளும்.

ஆகவே, இந்தியாவின் அரசியல் பிரச்னையைத் தற்சமயம் தீர்த்து வைக்க முடியுமானால் மிக நல்லது; காங்கிரஸ் தலைவர்களைச் சரிக்கட்டி அவர்களையும் அரசாங்க நிர்வாகத்தில் சேர்த்துக்கொள்ள முடியுமானால் ரொம்ப நல்லது. ஏன்? இந்திய அரசாங்கத்தின் பிரதிநிதியாக ஒரு பிரபல காங்கிரஸ் தலைவரைச் சர்வதேச மகாநாட்டுக்கு அனுப்ப முடியுமானால் ரொம்ப ரொம்ப நல்லது.

ஆகவே, இந்திய அரசியல் பிரச்னையைத் தீர்ப்பதற்கு ஒரு புது முயற்சி செய்ய இது சரியான சந்தர்ப்பமாகும்.

பிரிட்டிஷார் சாதாரணமாகச் சந்தர்ப்பங்களைத் தவற விடுவதில்லையென்பதை நாம் அறிவோமல்லவா?

சரி; வைஸராய் வேவல் என்ன கொண்டு வருவார்? இந்திய அரசியல் பிரச்னையைத் தீர்த்து வைப்பதற்காக அவர் ஏதேனும் ஒரு சமரச அரசியல் திட்டத்தைக் கொண்டு வந்தாரானால், அது எத்தகைய திட்டமாயிருக்கும்?

வைஸராய் வேவல் கொண்டு வரும் திட்டம், நாலு வருஷத்துக்கு முன்பு கிரிப்ஸ் கொண்டு வந்த திட்டத்துக்கு நிச்சயம் குறைவானதாய்த்தானிருக்கும்.

ஏனென்றால், கிரிப்ஸ் வந்தபோது பிரிட்டிஷாருக்கு ஏற்பட்டிருந்த அவசியமும் அவசரமும் இப்போதில்லை.

வெறும் கௌரவத்துக்காகத் தலையை வெட்டிக் கொள்கிறவர்கள் பிரிட்டிஷார் அல்ல. ரொம்ப அவசியம் நேர்ந்தால் கௌரவத்துக்காக அவர்கள் மீசை தாடியை எடுத்துக் கொள்ளும் அளவுக்குப் போவார்கள். அதற்கு மேல் ஒரு நாளும் போகமாட்டார்கள்.

எனவே, இந்தியாவுக்குப் பரிபூரண சுதந்திரத்தைக் கொடுத்து விட்டுத் தாங்கள் காலைத் தட்டிக்கொண்டு கப்பலேறி விட அவர்கள் தாங்களாக ஒரு நாளும் ஒப்புக்கொள்ளப் போவதில்லை.

கிரிப்ஸ் திட்டத்திலிருந்து கொஞ்சம், தேசாய்—லியாகத் ஒப்பந்தத்திலிருந்து கொஞ்சம், ஸப்ரூ கமிட்டி சிபார்சுகளிலிருந்து கொஞ்சம்;—இப்படியாக எடுத்துக் கலந்து அமெரியின் ஆபீஸில் காய்ச்சப்பட்ட கதம்பக் குழம்பாக வேவல் திட்டம் இருக்கலாம்.

அந்த மாதிரி திட்டத்தை ஒப்புக்கொண்டு இந்திய சர்க்காரின் நிர்வாகத்தில் தற்சமயம் காங்கிரஸ் தலைவர்கள் கலந்து கொள்வதில் இன்னொரு பெரிய தர்ம சங்கடம் இருக்கிறது.

* * *

நாலு வருஷத்துக்கு முன்னால் இந்திய சர்க்கார் நிர்வாகத்தில் காங்கிரஸ் தலைவர்கள் ஈடுபட்டிருந்தால், அது ரொம்பவும் கௌரவமாயிருந்திருக்கும்.

அப்போது பிரிட்டிஷார் தோற்றுக் கொண்டிருந்தார்கள்; ஜப்பான் ஜயித்துக் கொண்டிருந்தது.

அச்சமயம் அரசாங்க நிர்வாகத்தை ஒப்புக் கொண்டிருந்தால், இப்போது காங்கிரஸின் செல்வாக்கு அபரிமிதமாயிருக்கும்.

கீழ்நாட்டுக்கு எவ்வளவோ சிறப்பும் கௌரவமும் அளித்திருக்கும் ஜப்பானை அடியோடு அழித்து விடக் கூடாதென்று காங்கிரஸ் இப்போது சண்டையை நிறுத்தும்படி இருதரப்பையும் வற்புறுத்தலாம்.

ஆனால் தற்சமயம் இந்திய நிர்வாகத்தில் கலந்து கொண்டால், அப்படியெல்லாம் செய்ய முடியாது.

ஏற்கெனவே நாலு பேரால் அடிக்கப்பட்டுக் குற்றுயிராய்க் கிடக்கும் பாம்பை நாமும் சேர்ந்து அடிப்பதுபோல்தான் ஆகும், இப்போது காங்கிரஸ் இந்திய சர்க்காரில் சேர்ந்து, "ஜப்பானோடு தீவிர யுத்தம் செய்கிறோம்" என்று சொல்வது!

ஆகவே, தற்சமயம் காங்கிரஸும் காங்கிரஸ் தலைவர்களும் தேசமும் தர்ம சங்கடமான நிலைமையில் இருந்து வருகிறதென்பதில் ஐயமில்லை.

* * *

மேற்படி தர்மசங்கடமான நிலைமை இப்போது ஏற்பட்டிருப்பதற்கு மூல காரணம் எது என்று நமது நேயர்களுக்கு நாம் சொல்லவேண்டியதில்லை. நாலு வருஷத்துக்கு முன்னால் நாம் செய்துவிட்ட தவறுதான் மூலகாரணம்.

எனவே, தர்மசங்கடத்திலிருந்து விடுபட வேண்டுமானால், மூலகாரணத்திலிருந்தே ஆரம்பிக்கவேண்டும். எந்த இடத்தில் தவறு நேர்ந்ததோ அங்கே இருந்து தொடங்க வேண்டும்.

மாகாணங்களில் காங்கிரஸ்காரர்கள் கை நழுவவிட்ட அரசாங்கத்தைக் கைப்பற்ற வேண்டும்.

'கைப்பற்ற வேண்டும்' என்னும் போது, தனித்தனியாகவும், தலைக்குத் தலை நாட்டாண்மையாகவும், மாகாணத்துக்கு மாகாணம் சம்பந்தமில்லாமலும் கைப்பற்றுவதை நாம் குறிப்பிடவில்லை.

கட்டுப்பாடாகக் காங்கிரஸ் தலைவர்கள் கலந்து யோசித்து முடிவு செய்து, எல்லா மாகாணங்களிலும் ஒரே படியாக அரசாங்கத்தைக் கைப்பற்ற வேண்டும்.

அதனால் காங்கிரஸுக்கு நிச்சயமாகப் பலம் அதிகமாகும்.

அந்த பலத்தை வைத்துக் கொண்டு முஸ்லிம் லீகுடன் ஒரு சமரச ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும்.

இப்படி இரண்டு விதத்திலும் இழந்த பலத்தை மீண்டும் பெற்ற பிறகு, எவ்வித நிபந்தனையும் கேட்காமலும் எவ்வித நிபந்தனையும் கொடுக்காமலும் மத்திய சர்க்காரை ஏற்றுக் கொள்வது தான் தேசத்துக்கும் காங்கிரஸுக்கும் கௌரவம் என்று நாம் கருதுகிறோம்.

சிவகாமியின் சபதம்

கல்கி

பன்னிரண்டாம் அத்தியாயம்

மூன்று உள்ளங்கள்

கல்வியிற் கரையிலாத காஞ்சிமா நகருக்குள், வடக்குக் கோட்டை வாசல் வழியாக வாதாபி சக்கரவர்த்தி புலிகேசி பிரவேசித்துக் கொண்டிருந்தபோது, தெற்குக் கோட்டை வாசல் வழியாகக் குமார சக்கரவர்த்தி மாமல்லர் நகரிலிருந்து வெளியேறிக் கொண்டிருந்தார்.

அவருக்கு முன்னால் முப்பதினாயிரம் பல்லவ வீரர்கள் அடங்கிய காலாட் படையும், ஐயாயிரம் போர்க் குதிரைகளும், நூறு போர் யானைகளும், மற்றுமுள்ள சேனைப் பரிவாரங்களும் நகரிலிருந்து வெளியேறி, கோட்டைக்குச் சற்றுத் தூரத்தில் அணிவகுத்துப் பிரயாணத்துக்கு ஆயத்தமாக நின்றன.

இடிந்து தகர்ந்து பாதி தூர்ந்து போயிருந்த அகழியின் மேல் அவசரமாகப் போடப்பட்ட பாலத்தின் மீது கண்ணபிரான் ஓட்டிய ரதம் சென்றபோது, அதன் சக்கரங்கள் கடகட சடசட வென்று சப்தித்தன.

ரதத்தில் மாமல்லரும் பரஞ்சோதியும் வீற்றிருந்தார்கள்.

அகழிப் பாலத்தை ரதம் கடந்து அக்கரை சென்றதும், பாலம் அகற்றப்பட்டது. உடனே, கோட்டை வாசல் கதவுகள் தடார், தடார் என்று சாத்தப்பட்டன. அக் கதவுகளின் தாழ்களைப் போடும் 'லொடக்' 'லொடக்' என்ற சப்தமும், அதன் பிரம்மாண்டமான பூட்டுக்கள் பூட்டப்படும் 'டடக்' 'டடக்' என்ற சப்தமும், ரதச் சக்கரங்களின் கடகட சடசட சப்தத்துடன் கலந்து கொண்டன.

அச்சமயம் அந்த ரதத்தில் வீற்றிருந்த மூன்று பேரின் இருதயங்களுங்கூட 'படக்' 'படக்' என்று அடித்துக் கொண்டிருந்தன.

• • •

மாமல்லர் புறப்படுவதற்கு முன்னால் தமது அன்னை புவன மகாதேவியிடம் விடைபெற்றுக் கொள்வதற்காகச் சென்றபோது அந்த வீர மாதரசியின் கண்கள் கலங்கியிருந்தன. அவருடைய உள்ளமும் கலக்கமடைந்திருந்ததாகத் தோன்றியது. துர்விநீதனைத் தண்டிப்பதற்காகப் புள்ளலூர்ப் போர்க்களத்துக்கு மாமல்லர் புறப்பட்டபோது, புவன மகாதேவி இத்தகைய மனக் கலக்கத்தைக் காட்டவில்லை. முகமலர்ச்சியுடனும் பெருமிதத்துடனும் வீர மகனை ஆசீர்வதித்து வாழ்த்தி அனுப்பினாள்.

"அம்மா! இது என்ன? ஏன் கலங்குகிறீர்கள்? போர்க்களம் எனக்குப் புதியதா? யுத்தந்தான் புதியதா?" என்று மாமல்லர் கேட்டதற்குச் சக்கரவர்த்தினி, "குழந்தாய்! அதைக் குறித்தெல்லாம் நான் கவலைப்படவில்லை. உன்னுடைய தந்தையின் காரியந்தான் என்னை வருத்துகிறது. தசரதர் செய்ததைக் காட்டிலும் கொடுமையான காரியத்தை உன் தந்தை செய்கிறார். தசரதர் இராமனைக் காட்டுக்கு அனுப்புவதோடு நின்றார். உன் தந்தையோ இராமனைக் காட்டுக்கு அனுப்பி விட்டு, அதே சமயத்தில் இராவணனையும் விருந்தாளியாக வரவேற்கப் போகிறார்!" என்றாள்.

மாமல்லரின் முகத்தில் சென்ற சில காலமாகக் காணப்படாத குறுநகை மலர்ந்தது.

"தாயே! நான் இராமன் அல்ல. இராமனாயிருந்தால், சீதையையும் கூட்டிக் கொண்டல்லவா காட்டுக்குப் போகவேண்டும்? என் சீதை எங்கே? அப்புறம், அப்பா தசரதரும் இல்லை. ஏனென்றால், கைகேசி வார்த்தையைக் கேட்டுக்கொண்டு அவர் என்னை வனத்துக்கு அனுப்பவில்லை. புலிகேசி நிச்சயமாக இராவணன் இல்லை. இராவணன் சுத்த வீரன். அம்மா! போர்க்களத்தில் சகலமும் போய்த் தன்னந்தனியாக நின்றபோதும் சரணாகதி அடைய மறுத்து உயிரை விட்டான். அந்த மகா வீரன் எங்கே? இந்தக் கோழைப் புலிகேசி எங்கே? நூறு காத தூரம் படையெடுத்து வந்து விட்டு யுத்தம் செய்யாமலே அல்லவா இவன் திரும்பிப் போகப் போகிறான்?" என்றார் மாமல்லர்.

"அது என்னமோ, குமாரா! மொத்தத்தில் என் மனத்தில அமைதியில்லை. பல்லவ குலத்தின் ஜன்ம விரோதியுடன் உன் தந்தை சிநேகம் கொண்டாடுவதும் எனக்குப் பிடிக்கவில்லை; இந்த சமயத்தில் நீ காஞ்சியை விட்டுப் போவதும் எனக்குச் சம்மதமாயில்லை. இதனாலெல்லாம் என்ன விபரீதம் வருமோ என்னமோ என்று என் மனம் சஞ்சலமடைகிறது!" என்றாள் பல்லவ சாம்ராஜ்ய சக்கரவர்த்தினி.

மேற்கண்டவாறு அன்று காலை தாயார் கூறிய வார்த்தைகள் மாமல்லருடைய மனத்தில் ஆழமாய்ப் பதிந்து கிடந்தன. இன்னதென்று சொல்ல முடியாத ஒரு வகைச் சோர்வு அவருடைய உள்ளத்தில் குடி கொண்டிருந்தது. பெரு முயற்சி செய்து அந்தச் சோர்வைப் போக்கிக்கொள்ள அவர் முயன்றார். வரப்போகும் யுத்தத்தையும், பாண்டியனைத் தாக்கி அவனைத் தண்டிக்கப் போவதையும் நினைத்துக் கொண்டார். அத்துடன் மண்டபப்பட்டு கிராமத்தில் இருக்கும் ஆயனர் மகளையும் எண்ணிக் கொண்டார். தாம் போகின்ற மார்க்கத்தை விட்டுக் கொஞ்சம் விலகிச் சென்றால், மண்டபப்பட்டுக்குப் போய்ச் சிவகாமியைப் பார்த்துவிட்டுப் போகலாம். ஆனால் அது உசிதமாகாது என்று அவருடைய மனமே சொல்லிற்று. எட்டு மாதம் கோட்டையில் ஒளிந்து கொண்டிருந்து விட்டு எந்த முகத்துடன் சிவகாமியைச் சந்திப்பது? புலிகேசியைப் புறங்காட்டி ஓடச் செய்து விட்டுத் திரும்பி அவளிடம் வருவதாக அல்லவா அன்றைக்குச் சொல்லிக்கொண்டு விடை பெற்றோம்? பாண்டியனையாவது அவ்விதம் போர்க்களத்தில் புறங்கண்டு விட்டுத்தான் சிவகாமியைச் சந்திக்க வேண்டும். இவ்வாறான எண்ணங்கள் அலைமேல் அலை எறிந்து மாமல்லரின் உள்ளத்தை அலைத்துக் கொண்டிருந்தன.

* * *

தளபதி பரஞ்சோதியும் வழக்கத்தைக் காட்டிலும் அதிகக் கடுமையாகத் தம்முடைய முகத்தை வைத்துக் கொண்டிருந்தார். ஒரு பெரிய பொறுப்பு உணர்ச்சியானது அவருடைய மனதில் பெரும் பாரமாய் அமர்ந்து அதை அமுக்கிக் கொண்டிருந்தது.

அன்று காலையில் சக்கரவர்த்தி அவரை அந்தரங்கமாக அழைத்து, "தம்பி! உன்னை நம்பித்தான் மாமல்லனை இப்போது போர்க் களத்துக்கு அனுப்புகிறேன். அவனுடைய இப்போதைய மனோ நிலையில முன்பின் யோசனையில்லாமல் முரட்டுத்தனமாகக் காரியம் செய்வான். அவனுக்கு யாதொரு அபாயமும் நேரிடாதபடி நீதான் பார்த்துக்கொள்ள வேணும். தம்பி! இந்தப் புராதனமான பல்லவ குலம் நீடிப்பதற்கு அவன் ஒருவன்தான் இருக்கிறான். அவனுக்கு ஒரு அபாயமும் நேரக் கூடாதென்பதற்காகவே நான் இந்த அதமன் புலிகேசியுடன் சிநேகம் செய்து கொள்கிறேன். தெரிகிறதா. பரஞ்சோதி! பல்லவ வம்சம் உன்னைத்தான் நம்பியிருக்கிறது!" என்றார்.

மறுபடியும், "தளபதி! பாண்டிய நாட்டு மறவர்கள் மகா வீரர்கள். அவர்களையும் கங்க நாட்டார்கள் என்று நினைத்து விடாதே. எளிதில் அவர்களைப் புறங்காண முடியாது. ஆகையால், சர்வ ஜாக்கிரதையாய் நீ யுத்தத்தை நடத்தவேணும். ... இன்னொரு விஷயம். மாமல்லனை நீ போர்க்களத்தில் வேல்கள்-அம்புகள்

ளிடமிருந்து மட்டும் காப்பாற்றினால் போதாது" என்று சக்கரவர்த்தி கூறிவிட்டு, இலேசான புன்னகையுடன், "மண்டபப் பட்டுக் கிராமத்தில் இருக்கிறாளே, சிற்பியின் மகள் சிவகாமி, அவளுடைய கண் பார்வையாகிற கூரிய அம்புகளிலிருந்தும் காப்பாற்ற வேண்டும். தெரிகிறதா? முன் தடவை துர்விநீதனைத் தொடர்ந்து போனபோது ஏற்பட்டதைப் போல் இந்தத் தடவை ஏற்பட்டு விடக்கூடாது. போகும் காரியத்தை முடித்துவிட்டு நேரே காஞ்சிக்குத் திரும்பி வரவேண்டும்" என்றார்.

பரஞ்சோதி விடை பெற்றுக் கொண்டு கிளம்ப யத்தனித்தபோது, கடைசியாகச் சக்கரவர்த்தி அவரை மீண்டும் அருகில் அழைத்து, "தம்பி! நான் மண்டபப் பட்டுக் கிராமத்தைப் பற்றிச் சொன்னது திருவெண்காட்டுக்குப் பொருந்தாது. சௌகரியப்பட்டால் பாண்டியனைத் துரத்தியடித்த பிறகு திருவெண்காட்டுக்குச் சென்று, உன் தாயாரையும் மாமன் மகளையும் பார்த்துவிட்டு வா! ஆனால் அதற்குமேல் அவசரப்பட்டு ஒன்றும் செய்துவிட வேண்டாம். பல்லவ சைன்யத்தின் வீர தளபதியின் திருமணம் பல்லவ நாட்டுத் தலைநகரிலேதான் நடக்க வேண்டும்!" என்றார்.

சக்கரவர்த்தி கூறிய ஒவ்வொரு விஷயமும் பரஞ்சோதியின் பொறுப்பு உணர்ச்சியை அதிகப் படுத்துவதாகவே இருந்தது. ஆஹா! மகேந்திர பல்லவர் எப்பேர்ப்பட்ட அபூர்வமான மனிதர்! அவருடைய அன்பையும் நம்பிக்கையையும் இவ்வளவு தூரம் பெறுவதற்குத் தான் என்ன பாக்கியம் செய்திருக்க வேண்டும்! ஆனால், அவ்வளவு அன்புக்கும் நம்பிக்கைக்கும் தான் பாத்திரமாக வேண்டுமே? மாமல்லரைப் பத்திரமாய்க் காஞ்சிக்குக் கொண்டுவந்து சேர்க்க வேண்டுமே?......" திருவெண்காட்டுக்குப் போய்விட்டு வா!" என்று சக்கரவர்த்தி கூறியது அவருடைய பெருந்தன்மைக்கு உகந்தது. ஆனால் அதற்கு இந்தச் சந்தர்ப்பம் தகுதியானதா? தன்னை இத்தகைய போர்க்கோலத்திலே பார்த்தால், தாயும் மாமனும் என்ன நினைப்பார்கள்? உமையாள் என்ன நினைப்பாள்? ஏற்கெனவே அவள் நாணம் அதிகம் உள்ளவள். தன்னை அணுகவே இப்போது பயப்படுவாளோ என்னவோ?......இவ்வாறெல்லாம் பரஞ்சோதியின் மனம் எண்ணமிட்டுக் கொண்டிருந்தது.

* * *

ரதத்தின் மூலையில் அமர்ந்திருந்த கண்ணபிரானுடைய மனக் கண்ணின் முன்னால் அடிக்கடி ஒரு காட்சி வந்து கொண்டிருந்தது.

விடை பெற்றுக்கொள்ள வேண்டிய சமயம் வந்தபோது கண்ணபிரான் தன் எட்டு மாதக் குழந்தையின் முகத்தோடு முகம் வைத்து, "போய் வரட்டுமா, கண்ணே!" என்று கொஞ்சினான். அந்தக் குழந்தை அர்த்தம் ஒன்றுமில்லாமலும் அகாரணமாகவும் புன்னகை புரிந்ததுடன் தன் இரண்டு இளந்தளிர்க் கரங்களையும் நீட்டிக் கண்ணபிரானுடைய நீண்ட இரு காதுகளையும் பிடித்துக் கொண்டது. இந்தக் காட்சி அடிக்கடி கண்ணபிரான் மனதில் தோன்றியதுடன், குழந்தையின் தளிர்க் கரங்கள் அவன் காதைப் பிடித்த இடங்களில் அவனுக்கு என்னமோ செய்தது. மறுபடியும் அந்த மதுரமான ஸ்பரிச இன்பத்தை எப்போது அடையப் போகிறோமோ என்று அவன் மனம் ஏங்கிற்று.

அதோடு, கமலி கடைசியாக அவன் புறப்பட்டபோது கூறிய மொழிகளும் அவனுக்கு அடிக்கடி நினைவு வந்து கொண்டிருந்தன. முன்னெல்லாம், "யுத்தத்துக்கு எப்போது புறப்படுகிறாய்?" என்று கேட்டுக் கொண்டிருந்தவள், கண்ணபிரான் உண்மையாகப் புறப்படும் சமயம் வந்தபோது, "கண்ணா! எனக்கு என்னவோ இந்தத் தடவை நீ போவது பிடிக்கவேயில்லை. மாமல்லர் போவதும் பிடிக்கவில்லை. மகேந்திர பல்லவருக்கு இப்படி ஏன் புத்தி கெட்டுப் போய் விட்டது? வாதாபி சக்கரவர்த்தியை விருந்தாளியாக வரவேற்பதாம்! பாண்டிய ராஜாவோடு சண்டை போடுவதற்கு மாமல்லரை அனுப்புவதாமே? என் மனது ஏனோ தத்தளிக்கிறது. கண்ணா! எது எப்படியானாலும் என் தங்கை சிவகாமியை மறந்து

விடாதே! மாமல்லருக்கும் நினை ஊட்டி வை!" என்றான்.

இவ்விதமாக, அந்த ரதத்தில் இருந்த மூன்று பேருடைய உள்ளங்களும் வெவ்வேறு விதமான சிந்தனைகளில் ஆழ்ந்திருந்த போதிலும், பதை பதைப்பிலும் பரபரப்பிலும், வருங் காலத்தில் என்ன நேருமோ என்ற கவலையிலும் ஒன்று பட்டிருந்தன. எனவே, அவர்களுடைய இருதயத் துடிப்பும் ஒரே ஸ்வரத்தில் ஒரே தாளத்தில் சப்தித்தன.



பதின்மூன்றாம் அத்தியாயம்

இராஜோபசாரம்

வாதாபி சக்கரவர்த்தி காஞ்சி நகருக்கு விஜயம் செய்ததி லிருந்து ஏழு தினங்கள் காஞ்சியில் ஒரே திருவிழாக் கொண்டாட்டமா யிருந்தது.

ஒவ்வொரு நாளும் நகரின் ஒவ்வொரு பகுதிக்கு இரண்டு சக்கரவர்த்திகளும் விஜயம் செய்தார்கள். தினம் ஒரு கோயிலுக்குச் சென்றார்கள். ஒருநாள் காஞ்சியின் கல்விக் கழகங்களை யெல்லாம் பார்வை யிட்டார்கள். ஒரு நாள் சிற்பக்கலை மண்டபங்களையும் இன்னொரு நாள் சித்திர சாலைகளையும் பார்த்தார்கள். ஒருநாள் பௌத்த விஹாரங்களுக்கும் இன்னொரு நாள் ஜைனர்களின் கோயில்களுக்கும் சென்றார்கள். ஒருநாள் இரு சக்கரவர்த்திகளும் பட்டத்து யானைமீது அம்பாரியில் அமர்ந்து நகர் முழுவதும் பவனி வந்தார்கள்.

தினந்தோறும் அரண்மனையில் பிரமாதமான விருந்துகள் நடைபெற்றன.

பழகப் பழக இரண்டு சக்கரவர்த்திகளுக்குள்ளேயும் சிநேகம் முதிர்ந்து வந்ததாகத் தோன்றியது. இந்த சிநேகத்தின் பயனாக வருங்காலத்தில் இரண்டு சாம்ராஜ்யங்களும் பெரும் நன்மையடையப் போகின்றன என்று மகேந்திர பல்லவர் எதிர்பார்த்ததுடன், அதைப் புலிகேசியிடமும் தெரியப் படுத்தினார். தமக்குச் சமண மதத்தினிடமோ புத்த சமயத்தினிடமோ எள்ளளவும் துவேஷம் கிடையாதென்றும், சைவ சமயமானது மற்ற எல்லாச் சமயங்களையும் சம நோக்குடன் பார்க்க இடந் தருகிறதென்றும், அதனால் தான் தாம் சைவ சமயத்தைச் சேர்ந்ததாகவும், சமணர்களும் புத்தர்களும் அனாவசியமான விரோத பாவம் தம் பேரில் கொண்டிருப்பதாகவும் மகேந்திர பல்லவர் கூறினார். புலிகேசி தமக்கும் தீவிர மதப்பற்றோ, மதத் துவேஷமோ கிடையாதென்றும், இராஜீய காரணங்களை முன்னிட்டே சமண முனிவர்களுக்கு அதிகமாக இடங் கொடுத்து வந்ததாகவும், அவர்களுக்கும் தம்மேல் இப்போது கோபம் என்றும் தெரிவித்தார்.

சமய போதனையில் ஈடுபட்ட குருமார்கள் இராஜரீக விஷயங்களில் தலையிடவே கூடாதென்றும், தலையிடுவதால் அவர்களுக்கும் சமயத்துக்கும் நாட்டுக்குமே தீமைதான் என்றும் மகேந்திரர் கூறினார். அதை வாதாபி சக்கரவர்த்தியும் ஒப்புக் கொண்டார்.

மகேந்திர பல்லவர், "உண்மையான சமய பக்தியுள்ள மகான்களாயிருந்தால் இராஜாங்க விஷயங்களில் தலையிடவே மாட்டார்கள்" என்று சொல்லி, திருநாவுக்கரசர் பெருமானுடைய வாழ்க்கை உதாரணத்தை எடுத்துக் காட்டினார். அந்த மகானைத் தாம் பார்க்க முடியுமா என்று புலிகேசி கேட்டதற்கு, "யுத்தக் குழப்பங்களின்போது அந்தப் பெரியார் இங்கே இருக்க வேண்டாம் என்று நானே அவரைத் தீர்த்த யாத்திரைக்கு அனுப்பிவிட்டேன். இப்போது எங்கே இருக்கிறார் என்றே தெரியவில்லை" என்று மகேந்திரர் தெரிவித்தார். புலிகேசி அப்போது "பல்லவ நாட்டு மகா சிற்பியைக் கூட நான்



பார்க்க முடியாதோ?" என்று கேட்க, மகேந்திர பல்லவர் மிக்க வியப்படைந்தவர்போல நடித்து, "யாரைச் சொல்கிறீர்கள்?" என்று கேட்டார்.

"ஆயனர் என்பவரைத்தான்!" என்றார் புலிகேசி.

"அவரைப் பற்றி உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று இன்னும் மிக்க வியப்புடன் மகேந்திர பல்லவர் கேட்டார்.

"காட்டின் மத்தியில் உள்ள சிற்ப வீட்டை ஒரு நாள் நான் பார்த்தேன். அதனுள் உயிருள்ள பிராணி எதுவும் இல்லை. ஆனால் உயிர்ச் சிலைகள் பல இருந்தன. அதிலும் வெகு வெகு அற்புதமான நடனச் சிலைகள் பல இருந்தன. அப்புறம் விசாரித்தேன். அந்த வீட்டில் ஆயனர் என்னும் மகா சிற்பியும், நாட்டியக் கலையில் வல்ல அவனுடைய மகளும் வசித்ததாகவும், கோட்டை முற்றுகை காரணமாக அவர்கள் எங்கேயோ போய் விட்டதாகவும் தெரிந்தது. அவர்கள் தற்போது இருக்குமிடமும் தங்களுக்குத் தெரியாதோ?" என்று வாதாபி சக்கரவர்த்தி கேட்டார்.

"அவர்கள் இருக்குமிடந் தெரியும். அவர்களை அழைத்து வர ஆளும் அனுப்பியிருக்கிறேன். ஒரு வேளை நாளை கூடும் மகா சபைக்கு அவர்கள் வந்தாலும் வருவார்கள்" என்றார் காஞ்சி சக்கரவர்த்தி. அதைக் கேட்ட வாதாபி சக்கரவர்த்தி மிக்க உற்சாகம் அடைந்தவராகக் காணப்பட்டார்.

* * *

வாதாபி சக்கரவர்த்தி காஞ்சி நகருக்குள் பிரவேசித்த எட்டாம் நாள், அவருக்குப் பிரிவுபசாரம் நடத்துவதற்காகக் காஞ்சியின் பிரதான சபா மண்டபத்தில் பெரிய மகா சபை கூடியது.

அந்த மகா சபையில் பல்லவ சாம்ராஜ்யத்தின் மந்திரிகள், அமைச்சர்கள், தளபதிகள், மண்டலத் தலைவர்கள், கோட்டத் தலைவர்கள், நகரத் தலைவர்கள், வர்த்தகச் செல்வர்கள் முதலியோர் வீற்றிருந்தனர். இன்னும், சைவ வைஷ்ணவ சமய குருமார்கள், வடமொழி வித்வான்கள், தமிழ்மொழிப் புலவர்கள், இரு பாஷைகளிலும் கவிபாடத் தெரிந்தவர்கள், சங்கீத வித்வான்கள், சிற்பிகள், சித்திரக்காரர்கள் முதலியோரும் அவரவர்களுக்குரிய பீடத்தில் வரிசைக் கிரமமாக வீற்றிருந்தார்கள்.

மேலே கூறப்பட்ட அந்தந்தக் கூட்டத்தாருக்குள் பிரமுகர்களானவர்கள் வாதாபி சக்கரவர்த்திக்கு அறிமுகம் செய்து வைக்கப் பட்டார்கள். வடமொழி, தென் மொழி ஆகிய இரு மொழிகளிலும் வல்ல புலவர்கள் அந்த மகத்தான சந்தர்ப்பத்துக் கேற்ற கவிகளைப் புனைந்து பாடினார்கள். இரண்டு சக்கரவர்த்திகளில் எவரையும் தாழ்த்தாமலும் ஒருவரையும் அதிகமாக உயர்த்தாமலும் சமமான புகழுரைகளை நிறைத்துப் புலவர்கள் பாடிய கவிகள், அவர்களுடைய கவித்திறத்தைக் காட்டிலும் அவர்களுடைய லௌகீக ஞானத்துக்கே சிறந்த உதாரணங்களாயிருந்தன.

பிறகு, சாம்ராஜ்யத்தின் மிகச் சிறந்த சங்கீத வித்வான்கள் தங்களுடைய வித்வத்தைக் காட்டினார்கள். மகேந்திர பல்லவரால் புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்ட ஏழு நரம்புகள் உடைய 'பரிவாதினி' என்னும் வீணையைப் புலிகேசி பரிசீலனை செய்து மிகவும் மகிழ்ந்தார்.

இவ்வாறு நேரம் போய்க்கொண்டேயிருந்தது. ஆனாலும் மகேந்திர பல்லவர், வாதாபி சக்கரவர்த்தி இருவருமே கொஞ்சம் மன அமைதியின்றிப் பரபரப்பு உள்ளவர்களாகக் காணப்பட்டார்கள். மகேந்திர பல்லவரின் கண்கள் அடிக்கடி சபா மண்டபத்தின் வெளி வாசற் பக்கத்தை நோக்கிக் கொண்டிருந்தன.

கடைசியாக, அவர், உற்சாகமான குரலில், "அதோ வந்து விட்டார்கள்!" என்று கூறியபோது, பக்கத்திலிருந்த வாதாபி சக்கரவர்த்தி, "யார்? ஆயனரும் அவர் மகளுந்தானே?" என்று வினவினார்.

அப்போது உண்மையாகவே அச் சபா மண்டபத்தின் வெளி வாசல் வழியாக ஆயனரும் சிவகாமியும் உள்ளே பிரவேசித்துக் கொண்டிருந்தார்கள்.

வாசற்படியைத் தாண்டும்போது, சிவகாமியின் இடது கால் வாசற்படியில் இடறிற்று. "ஆஹா! இது என்ன அபசகுனம்?" என்று எண்ணமிட்டுக் கொண்டே சிவகாமி சபா மண்டபத்தில் பிரவேசித்தாள்.



திருவாங்கூர் பிரதம நீதிபதி திருப்புகழ் மணி ஸ்ரீ டி. எம். கிருஷ்ணசாமி ஐயர் அவர்கள் திருத்தணியில் திருப்புகழ் பஜனை நடத்திய காட்சி.

மாலைப் பொழுதினிலே

[ஸ்ரீ டி. கே. சிதம்பரநாத முதலியார்]

ஒரு பாஷைக்குரிய செல்வம் கவிதான். இது விஷயமாக அதிகமாய்ப் பேரம் பண்ண வேண்டிய அவசியமில்லை.

கவி ஒன்று கிடைத்து விட்டால் அதற்காகவே ஒரு விழாக் கொண்டாடலாம்.

கவி என்கிற வஸ்து அவ்வளவு அபூர்வமானது, — அப்படி லகுவாய்க் கிடைக்கிற காரியம் அல்ல, — என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேணும்.

1912-ம் வருஷத்துக் கல்கி தீபாவளி மலர் கைக்கு வந்தது. அதில் ஒரு கவி. எளிமையோடும் உணர்ச்சியோடும் உண்மையோடுமே வாய்ந்திருந்தது அது.

பல தடவை பாடிப்பாடி அனுபவித்தேன். நண்பர்களுக்கும் பாடிக் காட்டினேன். எல்லாரும் அனுபவித்தார்கள்.

தமிழுக்கு ஒரு கவி புதிதாய்க் கிடைத்து விட்டதே என்று வியந்தோம். பெருமை அடித்துக் கொண்டோம்.

கவியின் விஷயம் என்ன என்று பார்க்கலாம்.

ஒரு பெண் முருகனிடம் காதல் கொள்கிறாள்; காதல் வெறிக்கே உள்ளாகிறாள்.

முருகனை எண்ணின மாத்திரத்தில் எப்படி எல்லாமோ அவளுடைய மனம் ஓடுகிறது. வெட்கம் ஒரு புறம், அடுத்தாற்போல் கோபம், அதன் பிறகு உல்லாச விளையாட்டு. இப்படி எல்லாம் மனமானது தத்தளித்துக் கொண்டிருக்கிறது. இந்த நிலையில் ஒரு சம்பவம்.

★

ஒரு நாள் மாலை நேரம். பூந்தோட்டத்துக்குப் பூப்பறிப்பதற்காகப் போகிறாள் அந்தப் பெண் — தன்னந் தனியாகவேதான்.

மாலைப் பொழுதினி லே—ஒரு நாள்
மலர்ப்பொ ழிலினி லே
கோலக் கிளிகளு டன்—குயில் கள்
கொஞ்சிடும் வேளையி லே

அந்த வேளையில் என்ன நேர்ந்தது என்பதைப் பாருங்கள்!

மாலை குலவுமார் பன்—மறு வில்
மாமதி போல்முகத் தான்
வேலொன்று கையிலேந் தி—என்னை யே
விழுங்குவான் போல்விழித் தான்!

வேலன் வந்து விட்டான். எவ்விதத்திலும் வரக்கூடியவன் அல்ல என்று கருதிய அந்த வேலனே வந்து விட்டான். உள்ளத்தில் ஆனந்தம் பொங்கி எழுகிறது.

நீலக் கடலினைப் போல்—என்னெஞ் சம்
நிமிர்ந்து பொங்கிட வும்
நாலு புறமும்நோக் கி—நாணி நான்
'யாரிங்கு வந்த' தென் றேன்

ஏதோ நாணம் வந்துவிட்டதாக முகத்தைத் திருப்பிக்கொண்டு 'நான் தன்னந்தனியாக இருக்கும் இவ்வேளையில் யார் இங்கு வந்தது?' என்று சிறிது கோபமாகவே கேட்கிறாள்; — நாணம், கோபம் எல்லாம் பாசாங்குதான்.

அந்தக் கேள்விக்கு முருகன் மறுமொழி சொல்லுகிறான்; தன்னை அறிமுகப்படுத்திக் கொள்கிறானும்:—

'ஆலிலை மேல்துயின் றோ—புவ னம்
அனைத்து மேலளிக் கும்
மாலின் மருமகன் யான்—என்னை யே
வேலன் முருகனென் பார்

சந்திரன் வெண்குறும் உன்—முகத் தில்
சஞ்சலம் தோன்றுவ தேன்?
தொந்தமில் காதலினா—புதி தாய்த்
தொடர்ந்தி டுமுற வோ?

முந்தைப் பிறவிக ளில்—உனை நான்
முறையில் மணந் தேன்
எந்தன் உயிரல்ல வோ—கண் மணி
ஏனிந்த ஜாலம்?' என் றான்

முருகன் இவ்வளவு சொல்லவும் காதலிக்கு பித்து அதிகப்படியாய் ஏறுகிறது.

உள்ளம் உருகிடலும்—உவ கை
ஊற்றும் பெருகிட லும்
கள்ளத் தனமாகக்—கண்க ளில்
கனல்ள முவிழித் தேன்

இந்தக் கள்ளக் கோபத்துக்குப் பதிலாக அவன் என்ன செய்தான்?

புள்ளி மயிலின் மேல்—மோக னப்
புன்னகை தான்புரிந் தான்
துள்ளி அருகில்வந் தான்—என்க ரம்
மெள்ளத் தொடவும்வந் தான்!

பெண்புத்தி என்று ஒன்று இருக்கத் தானே செய்கிறது? 'பெண்புத்தி பின் புத்தி' என்று தெரியாமலா சொல்லியிருக்கிறார்கள்? அதனால் நேர்கிறது விபரீதம்.

பெண்மதிப் பேதமை யால்—அவன் கை
பற்றிடு முன்பெயர்ந் தேன்:—
கண்விழித் தேஎழுந் தேன்—துயரக்
கடலி லேவிழுந் தேன்!

அந்தி நேரம், பூஞ்சோலை, முருகன், அவன் இவளது கரத்தைத் தொட வந்தது எல்லாம் உறக்கத்திலே கண்ட கனவு தான். கனவாகவே இருந்தாலும் அக் கனவில் முருகன் தன் கரத்தைத் தொட்டிருந்தால் ஒரு ஆறுதல் இருக்கும். அதுவும் இல்லாமல் போய் விட்டது! இதை விடத் துயரம் என்ன இருக்கிறது?

வண்ண மயில்ஏ றும்—பெரு மான்
வந்தனை ஏனோசெய் தான்?
கண்கள் உறங்கா வோ—அத்து றைக்
கனவைக் கண்டிடே னோ?

என்பதாக உறக்கத்திலிருந்து விழித்துக் கொண்ட பெண் கட்டிலில் இருந்த படியே பக்கத்திலுள்ள தன் தோழியிடம் சொல்லுகிறாள்.

★

செய்யுள்கள் ஐந்து. ஐந்தும் பஞ்ச ரத்தினங்கள் தான்.

தமிழ்ப் பண்பு, கவிப் பண்பு, சமயப் பண்பு எல்லாம் அழகாய் உருவெடுத்து விட்டன கவிதையில். மதுரமான சின்னஞ் சிறு ஓடை, மலையில் பாறைகளுக்கிடையேயும் சோலைகளுக் கிடையேயும் ஓடியும் ஆடியும் திகைத்தும் பம்மியும் போவதைப் பார்க்கிறோம். அப்படி ஓடுகிறது விஷயம், பாடல்களின் இன்னிசை இடையே. ஆம்; ரொம்ப ரொம்ப அனுபவித்தோம். ஆனால் ஆசிரியர் யார் என்று தெரியவில்லை. தீபாவளி மலரில் பெயர் போடவில்லை.

கவிஞர் தேசிக விநாயகம் பிள்ளை அல்ல என்பதைக் கடிதம் எழுதித் தெரிந்து கொண்டேன். பிறகு "கல்கி" ஆசிரியர் ரா. கிருஷ்ணமூர்த்தியே கவிக்கும் ஆசிரியர் என்று தெரியவந்தது. எவ்வளவோ திருப்தியாய் இருந்தது.

★

நமக்கு இன்னொரு யோகம்.

ஐந்து பாடல்களையும் அருமையான முறையில் ஐந்து ராகங்களில் அமைத்துப் பாடிய இசைத் தட்டு ஒன்று வெளியாகியிருக்கிறது.

கோகிலகான எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்கள் தமிழ் நாட்டில் சங்கீத சிகரத்தில் வீற்றிருக்கிறார் என்பது வெளிப்படை. அதோடு தமிழ் நாட்டுக்கும் தமிழ்ப் பண் பாட்டுக்கும் அரிய சேவை செய்திருக்கிறார்; செய்து கொண்டும் வருகிறார். நம்முடைய சங்கீதமும் ராகங்களும் எங்கும் இல்லாத சிறந்த பண்பாடு உடையன என்ற உண்மையை வடநாட்டிலே பல இடங்களிலும் பாடியதின் மூலமாக ஸ்தாபித்திருக்கிறார்.

இத்தகைய சங்கீத மணியே மேலே கண்ட பாடல்களுக்கு இசை அமைத்து இசைத் தட்டில் பாடியிருக்கிறார். வீடுகளில் வைத்து ஆடவர் பெண்டிர் குழந்தைகள் எல்லாரும் தினம் தினம் கேட்டு அனுபவிக்கும் முறையிலே பாடியிருக்கிறார். இசைத் தட்டை ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ் கம்பெனியார் தமிழ் வருஷப் பிறப்போடு ஒட்டிக் கேட்கும்படியாக வெளியிட்டிருக்கிறார்கள்.



ஐந்து பாடல்களையும் செஞ்சுருட்டி முதலிய ஐந்து ராகங்களில் அமைத்துப் பாடி இருக்கிறது.

நம்முடைய சங்கீதத்தில் ராகம் ஒவ்வொன்றுக்கும் ஒரு அழகிய முகம் உண்டு; அந்த முகத்தில் எத்தனையோ உணர்ச்சி பாவங்கள் வந்து நம்மோடு பேசிக் குலாவும்.

மேற்படி இசைத்தட்டில் செஞ்சுருட்டி வந்து உல்லாசபாவம் காட்டுகிறது; கிளிகளுடன் குயில்கள் கொஞ்சுவது செஞ்சுருட்டி ராகத்தில்தானோ என்று சொல்லத்தோன்றும்.

அப்படியே பியாக் ராகம் எக்களிப்பைக் காட்டுகிறது; சித்து பைரவி அன்பும் விநயமும் கலந்த சாயலைக் காட்டுகிறது; மோகனத்தில் காதல் ரஸம் விளைந்து கனிகிறது. கடைசியில் வரும் சோகம், மாயமாளவகௌளை ராகத்தோடு ஒன்றாகிக் கரைந்து போகிறதைக் கண்கூடாகப் பார்க்கலாம்.

அந்தந்த பாவங்களோடு நம்முடைய இதயம் ஒன்றுவதற்காகப் பாட்டின் ஒவ்வொரு அடிக்கும் முன்னால், பிடிலை சங்கீதம் வாத்தியங்களிலிருந்து எழுகிறது.*

நம்முடைய சங்கீதம் இவ்வளவையும் சாதிக்கிறது. தமிழோடும் கவியோடும் சேர்ந்துதான் சாதிக்கிறது. இதை எல்லாம் நேர்முகமாகவும் உள்ளுணர்ச்சியோடும் அனுபவிக்க வேண்டுமானால் காதைக் கொடுத்துக் கேட்டால் மட்டும் போதாது: இதயத்தையே கொடுத்துப் பாட்டைக் கேட்க வேண்டும்.

ஸ்ரீமதி எம். எஸ். பாடியுள்ள "காலைத் தூக்கி நின்றாடும் தெய்வமே" என்னும் இசைத்தட்டு சில மாதத்துக்கு முன்பு வெளிவந்தது. சங்கீதமும் சாஹித்யமும் கலந்து உணர்ச்சி உருவம் பெறும் உயர்ந்த சங்கீதத்துக்கு அது எடுத்துக்காட்டாயிருந்தது. இப்பொழுது "மாலைப் பொழுதினிலே" என்ற பாட்டு இசைத் தட்டில் வெளிவந்திருக்கிறது. இரண்டு அற்புதமான அபூர்வமான இசைச் செல்வங்களை, சங்க நிதி பதும நிதி போன்ற செல்வங்களை, நமக்கு ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி கொடுத்திருக்கிறார். அவருக்கு நமது மனமார்ந்த நன்றி.

---

* இந்தப் பாட்டுக்குப் பிடிலை சங்கீதம் அமைத்துக் கொடுத்தவர் "மீரா" சங்கீத வாத்திய கோஷ்டியின் தலைவரான ஸ்ரீ எஸ். வி. வெங்கட்ராமன் என்பதை அறிந்து மகிழ்கிறேன். பாடலின் பொருளையும் பாவத்தையும் நன்கு உணர்ந்து அதற்குத் தகுந்தவாறு பிடிலை சங்கீதம் அமைத்திருப்பதைப் பெரிதும் பாராட்டுகிறேன்.

ஆகாச வெடி

"இந்தியா மந்திரி அமெரியுடன் ஒரு வார சம்பாஷணைக்குப் பின் வைஸ்ராய் வேவல் இன்று சிரம பரிகாரம் செய்து கொண்டார்." —லண்டன் செய்தி.

இந்திய அரசியல் பிரச்னை சம்பந்தமாக அவர் எடுத்துக்கொண்ட சிரமத்திற்கு ஏதேனும் பரிகாரம் ஏற்பட்டதா என்று அறிய விரும்புகிறோம்.

★

"இம்மாதம் 20-ந் தேதியன்று ஹிட்லருக்கு 55-வது பிறந்த தினக் கொண்டாட்டம் நடைபெறுமாம்." —ஒரு செய்தி.

மேற்படி கொண்டாட்டத்தில் கலந்து கொள்வதற்குத்தான் நேச தேசங்கள் ஜெர்மனியை நோக்கி இத்தனை விரைவாகச் செல்லுகின்றன போலும்!

★

"இந்தியாவிலிருந்து அமெரிக்காவுக்கு 300 மணல் மூட்டைகளை அனுப்பி வைக்க இந்திய சர்க்கார் முடிவு செய்திருக்கின்றனர்." —ஒரு செய்தி.

சான்பிரான்ஸிஸ்கோ செல்லும் இந்தியப் பிரதிநிதிகள் அங்கே போய் அளப்பதற்கு ஏதாவது வேண்டுமல்லவா?

★

"ஆமத்நகர் சிறையில் நேருஜி 1100 புஸ்தகங்களும் ஆஸாத் 800-புஸ்தகங்களும் சேகரித்திருக்கின்றனர்" —ஒரு செய்தி.


இப்படி ஆமத் நகர் சிறைச்சாலையை அவர்கள் வாசக சாலையாக மாற்றிய பிறகு அவர்களை வேறு சிறைச்சாலைக்கு மாற்றியதில் ஆச்சரியமில்லை!

★

"தம்மைப் பார்க்க வந்திருந்த ஒரு சீன வியாபாரியிடம் மகாத்மாஜி 'நல்ல காரியங்கள் செய்' என்று கூறினாராம். பிறகு வியாபாரி மகாத்மாஜியிடம் ஒரு கையெழுத்து வாங்கிக்கொண்டார்" —ஒரு செய்தி.

நல்ல காரியம் செய்தார்!





















ஆனந்தி

பரதநாட்டிய —

மயிலை சங்கீத சபா

13 - 4 - 45 வெள்ளிக்கிழமை தமிழ் வருஷப்

மயிலாப்பூர் பி. எஸ். ஹைஸ்கூல்

★

நமது புராதனச் செல்வமான பரதநாட்டியக் கலையைப் பாரத நாட்டின் தற்கால மனோரதங்களுக்குப் பொருத்தமாக்க முடியுமா? தேசியம், சுதந்திரம், சமத்துவம், தொழிலின் சிறப்பு முதலிய நவீன இலட்சியங்களுக்குப் புராதன பரதநாட்டியக் கலையைக் கொண்டு சேவை செய்தல் சாத்தியமா? — இந்தப்



ராதா

அபிநயக் கச்சேரி

முதல் ஆண்டு விழா

பிறப்பன்று மாலை 6-30 மணிக்கு

டிக்கட்டுகள் : ரூ. 10, 5, 3, 1.

★

பிரச்னையை, நமது தேசிய மகாகவி ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியாரின்

'' ஆடுவோமே — பள்ளுப் — பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோ மென்று ''

என்னும் பாடலுக்கிசைய ஆனந்தியும் ராதாவும் சேர்ந்து ஆடும் நடனத்தைப் பார்த்துவிட்டு முடிவு செய்யக் கோருகிறோம்.

வான சஞ்சாரம்

இசைத் தேன்

சென்ற வார ரேடியோக் கச்சேரிகளைக் கேட்டவர்களுக்குச் சந்தோஷகரமானதோர் ஆச்சரியம் ஏற்பட்டிருக்கும். முசிரி சுப்ரமணிய அய்யர் அசல் முசிரியாகவே திரும்ப வந்து விட்டார். கொஞ்சகாலமாக அவர் சாரீரம் அவருக்கு அடங்காது எங்கேயோ போயிருந்தது. ஆகவே அவர் சங்கீதத்தைப் பழைய ஞாபகங்களை வைத்துக் கொண்டு தான் அனுபவிக்க வேண்டி வந்தது. சென்னை நிலையத்தில் 7உ அவர் சாரீரம் பெரும்பாலும் திரும்பக் கிடைத்த பொக்கிஷமா யிருந்ததோடு கச்சேரியும் முதல்தரமா யிருந்தது. அடாணா, கேதாரம், தோடி, காம்போதி ராகங்களை அவருக்கு இயற்கையான நிதானம், வளைவு குழைவுகளோடு நன்கு வழங்கினார். தோடியும் காம்போதியும், உருப்படிகளில் "எவரி மாட்ட"வும் மிகச் சிறப்பா யிருந்தன. சாரீரம் தன் ஆளுகைக்குள் வந்து விட்டால் அவர் சங்கீதத்தின் பாவப் பொழிவைப் பற்றிக் கேட்கவேண்டுமா?

திருச்சியில் 9உ சாத்தூர் சுப்ரமணியத்திடமிருந்து கேட்டது மற்றொரு உயர்தரக் கச்சேரி. சமீப காலத்தில் முன்னணிக்கு வந்திருக்கும் வித்வான்களில் அவர் ஒருவர். வசீகரமான சாரீரம் என்று சொல்ல முடியாவிடினும் அரிய சாதகத்தினாலாய தங்கு தடையில்லாத உதவுபடி. ஞான பாவமும் கற்பனையும் மிகுந்த சங்கீதம். பெரும்பாலும் மத்யம கால வழி. அவர் ஆலாபனை செய்த பைரவி, கல்யாணி, காம்போதி ராகங்களில் மூன்றாவது வெகு தேர்ந்தியா யிருந்தது 'யாரோ இவர் யாரோ' 'நம்பி வச்சினே' உருப்படிகளில் கண்ட நிரவல் ஸ்வரங்கள் மனதைக் கவர்ந்தன. அன்று அவருக்குப் பக்க வாத்யம் வாசித்த டி. கே. ஜயராமய்யரின் வயலினும் அனுசரணையாயும் ரஞ்சகமாயு மிருந்தது.

அடுத்தபடியாக ஞானபாவக் கச்சேரிகளில் 8உ சென்னையில் கேட்ட கோபு என்ற மருத்துவக்குடி ராஜகோபாலய்யரது குறிப்பிடத் தக்கது. இவர் ஒரு அபூர்வ மனுஷ்யர். இவருக்குத் தெரியாத உருப்படி கிடையாது எனலாம். சாரீர சம்பத்தினால் பிரமிக்க வைக்கும் சங்கீதமல்ல. மட்டமான குரலே, ஞானபாவத்தினாலும் சாதகத்தினாலும் அரிய வேலைப்பாடுகளைக் காட்டும்படி செய்து விடுகிறார். ராமப்ரியா நாஸூக்கா யிருந்தது. கரஹரப்ரியாவில் பெரிய 'பிளான்' போட்டார். மத்யம காலமும் குளிர்ச்சியாகவே யிருந்தது. உருப்படிகளெல்லாம் சங்கதி நிறைந்து கச்சிதமா யிருந்தன.

* * *

திருச்சியில் 4உ பாடிய எஸ். ஸ்வாமிநாதய்யரின் கச்சேரி கவனத்தை இழுத்தது. அவசரமில்லாத அழுத்தமான சங்கீதம். நாட்டக் குறிஞ்சி, அடாணா, ஹம்ஸாநந்தி ராகங்கள் அழகா யிருந்தன. 'கனவோ நினைவோ' உருப்படியில் ராக பாவமும் சுக பாவமும் நிறைந்திருந்தன. பல்லவியில் நிரவல் ஸ்வரங்கள் ஜோராயிருந்தன. ஆனால் ஞானத்திற் கேற்ற பாணி யழகு ஏற்பட வேண்டும்.



கே. எஸ். கிருஷ்ணன்

அன்று சென்னையில் கேட்ட ஸ்ரீ. சுப்புலக்ஷ்மியின் கானமும் ரஸிக்கத் தக்கதா யிருந்தது. சங்கராபரண ராகமும் 'தூக்கிய திருவடி' உருப்படியும் சுகமா யிருந்தன.

5உ சென்னையில் எம். ஷண்முக சுந்தரத்தின் பாட்டும் திருச்சியில் மன்னார்குடி கே. சாவித்திரியம்மாளின் கோட்டு வாத்யமும் நன்றா யிருந்தன. முதலவருக்கு சாரீரம் நடுத்தரமாயினும் நல்ல உதவுபடி; மாயாமாளவ கௌளை, சாமா, தோடி, சங்கராபரண மென்று ராகங்களை நேர்த்தியாய் வழங்கினார். கோட்டு வாத்யத்திலிருந்து கல்யாணி, ஆனந்த பைரவி, அடாணா, ரஞ்சனி ராகங்கள் இழைந்திழைந்து வந்தன.

6உ சென்னையில் பாடிய டி. ஏ. வெங்கட்ராமய்யர் பாடிய நாகஸ்வராவளி ராக ஆலாபனையையும் 7உ அதே நிலையத்தில் கேட்ட ஆர். பிரஹதாம்பாளின் இனிமையும் நாஸூக்கும் நிறைந்த கானத்தையும் குறிப்பிடாமலிருக்க முடியாது.

9உ சென்னையில் பாடிய கே. எஸ். கிருஷ்ணனுடைய பாட்டு சாதக பிர்க்கா நிறைந்தது. பேகடா, கரஹரப்ரியா, கமாஸ் ராகங்கள் விஸ்தாரமாயும் நல்ல கற்பனை யுடனும் வெளிவந்தன. கமாஸ் உருப்படி 'ப்ரோசே' சுகமா யமைந்தது 'பக்கல நிலபடி'யில் நிரவல் ஸ்வரங்கள் விறு விறுப்பா யிருந்தன.

* * *

8உ சென்னை புரோகிராமில் 'பால் பண்ணை — பேச்சு' என்று கண்டிருந்ததைப் பார்த்தேன். நமது சென்னை மேயர் ராதா கிருஷ்ண பிள்ளை அவர்கள் இந் நகரமெங்கும் நல்ல பால் களஞ்சிய மாக்குவதற்காகத் தாம் எடுத்துக் கொண்ட முயற்சிக்குப் பலன் கிடைத்து விட்டதாக அறிவிப்பார், இனி மேல் நல்ல காபி வேண்டியமட்டும் சாப்பிடலாம் என்று நாக்கைத் தீட்டிக்கொண்டு அவர் சொற் பொழிவைக் கவனித்தேன். பாவம்! அவர் என்ன செய்வார்! பல மேல் நாடுகளில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பால் பண்ணைகளை ஏராளமாய் விருத்தி செய்து அந் நாட்டினர் போதிய பால் சாப்பிடுகின்றனர் என்றும் நமது நாட்டில் பசுக்கள் எண்ணிக்கையும் நமது பக்தியும் அதிகமா யிருந்தும் பெருவாரியான ஜனங்கள் பாலையே அறிய முடியாமலிருக்கிற தென்றும் ஒலை வாசித்தார். மறு நாள் காலை, என் வீட்டுப் பால்காரன் வழக்கம் போல் ஜலத்தில் பாலைக் கலந்து கொண்டுவந்துதான் அளந்தான்!



....அத்யாவசியமாய்த் தேவையானதும் விலை மதிப்புள்ளதுமான மருந்துச் சரக்குகள் மீண்டும் கடலில் அமிழ்ந்து சேதமாயின.

அக்காலத்திலும், தண்ணீரிலும் மலேரியா நோயால் போய் இருக்கலாம். இந்தக் கொல்லும் வியாதியால் ஆயிரக் கணக்கானவர்கள் பீடிக்கப்பட்டிருக்கிறார்கள். விசேஷ ஏற்பாடுகள் செய்து உயிர்களைக் காக்கும் மருந்துகள் இந்தியாவுக்கு அவசரமாக கொண்டுவரப்படுகின்றன. ஆனால் அவைகளைக் கொண்டுவரும் கப்பல்களோ டார்பிடோ செய்யப்பட்டு மூழ்கடிக்கப்படுகின்றன. 30 அல்லது 40 தீர கப்பலோட்டிகள் மூழ்கியிறந்திருக்கிறார்கள். வியாதி பரவிய இடங்களில் ஆயிரக் கணக்கானவர்கள் செத்து மடிகிறார்கள்.

யாரோ பேசினார்

யாரோ, அசிரத்தையாக ஒரு கவலையான விபரமளித்தார், அக்கப்பலைப் பற்றிய கடைசி குறிப்பை அஜாக்கிரதையாக வெளியிட்டார்போலும். அதைக்கேட்டு எதிரி அக்கப்பலின் நன் கீழ்மூழ்கி கப்பலால் கவிழ்த்துவிட்டான். இந்த அஜாக்கிரதையான வார்த்தை அரட்டையாகச் சொல்லப்பட்டு மறந்தும் விடப்பட்டது.

இப்படித்தான் விபத்துக்கள் நேருகின்றன. ஒரு வார்த்தைதானே என்று நினைத்துப் பேசிவிடுகிறீர்கள். ஒன்றுமே சொல்லாதீர்கள். எதிரிக்கு இப்படிச் சந்தர்ப்பங்களை அளிக்காதீர்கள். கடிதம் எழுதுவதிலும், டெலிபோனில் பேசுவதிலும் முக்கியமாய் கவனமாய் இருக்கவும். எதிரி எப்பொழுதும் மகா எச்சரிக்கையோடும் யார் என்ன பேசுகிறார்கள் என்பதில் கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறான். குப்பைக் கூடையும் தந்தி கம்பிகளை பற்றிக் கேட்பதுதான் அவனுடைய ரகசிய ஆயுதங்கள்.

நீங்கள் பார்த்த கப்பல்கள், தளவாடங்கள் அருப்பு போக்குவரத்து, அல்லது யுத்தத் தொழிற்சாலையில் நடைபெறும் வேலைகள் இவைகளைப்பற்றி பேசுவதிலும் எழுதுவதிலும் நீங்கள் முற்றிலும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். உயிர்களைக் காப்பாற்றவும், மக்களுக்குத் தேவையான பொருள்களை பத்திரமாக வந்து சேரும் பொருட்டும் ஒன்றும் பேசாதீர்கள்.




தேசியப் போர்முனை வெளியீடு

நீங்கள்
அப்படிச் செய்யமாட்டீர்கள் என்பதை உறுதிப் படுத்துங்கள்.

AAA 558 TM

பலராமர்

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்



புகழ்பெற்ற வீரனான பலராமன் பாண்டவர்களுடைய பாசறைக்கு வந்தான். பருத்த தோள்களும் நீலப் பட்டும் சிங்க நடையுமாக ஹலாயுதன் வந்ததும் யுதிஷ்டிரனும் கிருஷ்ணனும் மற்றவர்களும் பெருமகிழ்ச்சி அடைந்து எழுந்து வணங்கினார்கள். விருத்தர்களும் பெரியோர்களுமான துருபதன் விராடன் முதலியவர்களை வணங்கிவிட்டுப் பலராமன் தருமபுத்திரனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்தான்.

"பரதவம்சத்தில் ஆசையும் கோபமும் துவேஷமும் வலுத்து விட்டன. சமாதானப் பேச்சு எல்லாம் முறிந்து போயிற்று. போர் துவக்கி விட்டீர்கள் என்பதை அறிந்து குருக்ஷேத்திரத்துக்கு வந்தேன்" என்றான் பலராமன்.

வருத்தம் தாங்காமல் பேச்சை ஒரு கணம் நிறுத்திக் கொண்டு, மறுபடியும் "தருமபுத்திரனே! பயங்கரமான விநாசம் உண்டாகப் போகிறது. வெட்டப்பட்ட அங்கங்களாலும் இரத்தச் சேற்றினாலும் பூமி முழுதும் கோரமாக அலங்கரிக்கப்படப் போகிறது. இந்தச் சம்பவம் தெய்வ வசமாக ஏற்பட்டு விட்டது. உலகத்திலுள்ள அரசர்களும் க்ஷத்திரிய ஜாதியும் விதியினால் ஏவப் பட்டு யமாலயத்தைத் தேடிப் பைத்தியக்காரர்களைப்போல் இங்கே கூடியிருக்கிறார்கள். நான் கிருஷ்ணனுக்குப் பல தடவை சொன்னேன். 'நமக்குப் பாண்டவர்களைப் போலவே துரியோதனனும், இருவருக்குள் உண்டாயிருக்கும் மூடச் செய்கைகளில் எந்தப் பக்கமும் நாம் சேரமுடியாது' என்று நான் எவ்வளவு சொல்லியும் கிருஷ்ணன் என் சொல்லுக்கு இசையவில்லை. தனஞ்சயனிடத்தில் அவனுக்குள்ள பிரீதியினால் பாண்டவர்களாகிய உங்கள் பட்சத்திலேயே இருந்து கொண்டு யுத்தத்திற்கும் அனுமதி கொடுத்து விட்டான். கிருஷ்ணன் ஒரு பக்கத்திலிருந்து நான் மற்றொரு பக்கத்தில் இருக்க எவ்வாறு முடியும்? வீரர்களான பீமன் துரியோதனன் இருவரும் என்னிடம் கதாயுதப் பயிற்சி பெற்ற சிஷ்யர்கள். இருவரிடமும் நான் சமமான அன்பை உடையவன். கௌரவர்கள் நசிப்பதைப் பார்த்து என்னால் பொறுக்க முடியவில்லை. நீங்கள் யுத்தம் செய்யுங்கள். இந்த விபரீதம்



பொங்கி வழியட்டும். நான் தீர்த்த யாத்திரை போகிறேன். எனக்கு உலகமே பிடிக்க வில்லை" என்றான்.

இவ்வாறு சொல்லிவிட்டுக் கிருஷ்ணனுடைய சகோதரன் பலராமன் துக்கத்தைப் பொறுக்காதவனாகப் பரம்பொருளைத் தியானித்துக் கொண்டு யாத்திரை சென்றான் என்கிறார் வியாசர்.

'தரும சங்கடம்' என்றால் ஒன்றுக்கொன்று முரண்பட்ட கடமைகளில் எதனைச் செய்வது என்பது நிச்சயமாக விளங்காமல் திகைக்கும் நிலைமை. இந்த நிலைமை யோக்கியர்களுக்கு அடிக்கடி நேருகிறது. அயோக்கியர்களுக்கு இந்தக் கஷ்டம் இல்லை. தங்கள் தங்கள் பற்றுகளும் ஆசைகளுமே அவர்களை நடத்தும். ஆசைகளைக் கழற்றிவிட்ட மகான்களுக்குத் தருமசங்கடங்கள் வந்து சேரும். பாரதக் கதையில் பீஷ்மர், விதுரன், யுதிஷ்டிரன், கர்ணன் இவர்களுக்குப் பெருஞ் சோதனைகள் ஏற்பட்டன. புராணத்தில் இவர்கள் அவ்வப்போது எவ்வெவ்வாறு சங்கடத்தைத் தீர்த்துக் கொண்டார்கள் என்பதைப் படிக்கிறோம். அவர்களுடைய இயற்கை குணங்களுக்கும் புத்தி நுட்பத்திற்கும் அவர்கள் படித்த பண்பாட்டுக்கும் தக்கவாறு அவர்கள் சங்கடங்களைத் தீர்த்துக் கொண்டதாகக் கதை மாறுபட்டுச் செல்லும். இப்போது விமரிசனை செய்பவர்கள் சில சமயம் இதை மறந்து எல்லாவற்றையும் ஒரே தராசில் நிறுக்கப் பார்க்கிறார்கள். அது தவறு. இராமாயணத்தில் தசரதன், கும்பகர்ணன், மாரீசன், பரதன், லக்ஷ்மணன் இவர்களுக்குத் தருமசங்கடங்கள் நேர்ந்து அவரவர்கள் ஒவ்வொரு முறையில் தீர்த்திருப்பதைப் பார்த்து நாமும் பயன்பெறலாம். இவ்வாறே பாரதத்திலும், பலராமன் யுத்தத்தினின்று ஒதுங்கி நின்ற கதை இது. மகா பாரதப் போரில் சேராதவர்கள் பரதநாட்டு அரசர்கள் இருவரே. ஒருவன் பலராமன். மற்றவன் ருக்மன் என்னும் போஜகடநாட்டு அதிபதி. அவன் கதையை ஒரு தனி அத்தியாயமாக முதலிலிருந்து சொல்ல வேண்டும்.

1945-ம் வருஷத்துக்
"கல்கி" சிறு கதைப் போட்டி
பரிசு ரூ. 1000

முதல் பரிசு ரூ. 500; ஐந்து பரிசுகள் ஒவ்வொன்று ரூ. 100

1. இந்தப் போட்டிக்கு அனுப்பும் கதைகள், தமிழ் நாட்டு மக்களின் வாழ்க்கையை அடிப்படையாகக்கொண்ட புதுக் கற்பனைகளாக இருக்க வேண்டும்.

2. கதையின் நீளம் "கல்கி"யில் ஐந்து பக்கம் முதல் பன்னிரண்டு பக்கத்துக்குள் அடங்குவதாயிருக்க வேண்டும்.

3. ஒரே ஆசிரியர் இரண்டு கதைகள் அனுப்பி வைக்கலாம். அதற்குமேல் அனுப்பக்கூடாது.

4. சென்ற 1944-ம் வருஷத்துப் போட்டிக்கு அனுப்பிப் பரிசு பெறாத கதைகளைத் திரும்பவும் அனுப்பக்கூடாது. அம்மாதிரி கதைகள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டா.

5. 1945-ம் வருஷம் ஜூன் மீ 30வுக்குள் "கல்கி" காரியாலயத்துக்கு வந்து சேர வேண்டும். கவரின் மேல் "சிறு கதைப் போட்டி" என்று குறிப்பிட வேண்டும்.

6. பின் வரும் பஞ்சாயத்தார் பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுப்பார்கள். அவர்களுடைய தீர்ப்பே முடிவானது.

(1) ஸ்ரீ டி. கே. சிதம்பரநாத முதலியார்
(2) ஸ்ரீமதி வி. சரஸ்வதி அம்மாள்
(3) ஸ்ரீ வ. ராமஸ்வாமி ஐயங்கார் (வ. ரா.)
(4) ஸ்ரீ ந. பிச்சமூர்த்தி பி. ஏ.
(5) ஆசிரியர், "கல்கி"

7. எல்லாவற்றிலும் சிறந்ததென்று பஞ்சாயத்தார் கருதுகிற கதைக்கு முதல் பரிசு ரூ. 500 அளிக்கப்படும். அடுத்தபடியாக ஐந்து கதைகளுக்கு ஒவ்வொன்றுக்கும் ரூ. 100 வீதம் அளிக்கப்படும். பரிசு பெற்ற கதைகளின் 'காபிரைட்' உரிமை "கல்கி" காரியாலயத்தைச் சேர்ந்தது.

8. பரிசு பெறாத கதைகளில் பிரசுரத்துக்குத் தகுதியான கதைகள் பிரசுரத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும். அவற்றுக்கு உசிதமான சன்மானம் வழங்கப்படும்.

9. முதற் பரிசு பெற எந்தக் கதையும் தகுதியற்றதென்று பஞ்சாயத்தார் கருதினால், பரிசுத் தொகை பஞ்சாயத்தாரின் உசிதம்போல் பிரித்துக் கொடுக்கப்படும்.

10. இந்தப் போட்டி சம்பந்தமான விதிகளை மாற்றவும் திருத்தவும் "கல்கி" ஆசிரியருக்கு உரிமை உண்டு.

11. சந்தேகம் ஏற்படும் எந்த விஷயத்திலும் கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

மானேஜர், "கல்கி"
கீழ்ப்பாக்கம், சென்னை.

இப்பொழுது
காகிதமும் அட்டையும்
கட்டுப்பாட்டு விலைக்கு
உங்களுக்குக் கிடைக்கும்

இந்திய சர்க்காரின் கைத்தொழில் சிவில் சப்ளை இலாகா காகித கட்டுப்பாடு (சிக்கனம்). காகித கட்டுப்பாடு (விநியோகம்) உத்திரவு ஷரத்துகளுக்கு அனுசரணையாக கீழ்க் கண்டவற்றை பிரசுரித்து இன்னும் ஒரு நடவடிக்கை எடுத்துக் கொண்டுள்ளனர்.

1. இந்தியாவில் தற்சமயம் தயார்செய்ய அனுமதி அளிக்கப் பட்டிருக்கும் எல்லா வித இந்திய காகிதங்கள் அட்டை வைக்கோலால் செய்யப்படும். அட்டை மில் அட்டை நீங்கலாக—மற்ற எல்லா ரகங்களுக்கும் சம்பந்தப்பட்ட 1944 வருஷ காகிதவிலை கட்டுப்பாடு உத்திரவு.
2. இந்திய தயாரிப்பு வைக்கோல் அட்டை, மில் அட்டை சம்பந்தப்பட்ட 1944 வருஷ காகித கட்டுப்பாடு (அட்டை விலைகள்) உத்திரவு. மேற்படி இரு உத்திரவுகளையும் பிறப்பித்திருக்கின்றனர். இந்த உத்தரவுகளின் நோக்கம் உபயோகிப்பவர்கள் தங்கள் தேவையை நியாயமான விலைக்கு பெறுவதற்கு உதவியளிப்பதே.

முக்கியமான ஷரத்துகள்

முக்கியமான ரெயில்வே ஸ்டேஷன்களில் சரக்கை எடுத்துக் கொள்ளவேண்டிய விலைகள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றிற்கு மேல் மொத்த வியாபாரத்துக்கு 10 சத விகிதமும் நிர்ணயிக்கப்பட் டிருக்கிறது. எந்த தயாரிப்பவரும் வியாபாரியும் பட்டியலில் குறிப்பிட்டிருக்கும் ரகங்களை இந்திய உத்திரவுகளில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிற விலைக்கு அதிகப்படியாக விற்கக்கூடாது.

பேப்பர் அல்லது அட்டை வியாபாரம் செய்யும் ஒவ்வொருவரும் தங்கள் வியாபார ஸ்தலங்களில் மொத்த விலை சில்லறை விலை பட்டியலை நன்கு தெரியக் கூடிய இடத்தில் தொங்கவிட்டிருக்க வேண்டும். கேட்கும்போது அதை காண்பிக்கவும் வேண்டும்.

இந்த உத்திரவின்கீழ் அனுமதிக்கப்பட்ட விலைக்கு மேல் பேப்பர் அல்லது அட்டையை விற்பது மட்டுமல்லாமல் வாங்குவதும் குற்றமென்பதை ஞாபகத் தில் வையுங்கள்.

பல ரகங்களின் ஜாபிதாவும், ரெயில்வே ஸ்டேஷனில் டெலிவரி எடுத்துக் கொள்ள உண்டான மில் விலைகளும் கொண்ட பூரா விவரங்களும் 1944-ம் வருஷ காகித விலைக் கட்டுபாடு உத்திரவு, 1944 வருஷ காகித கட்டுப்பாடு (அட்டை விலைகள்) உத்திரவுகளிலும் பிரசுரிக்கப்பட் டிருக்கின்றன. அவைகளின் பிரதிகள் டில்லி சிவில் லைன்ஸில் உள்ள அரசாங்க பிரசுரங்களின் காரியாலய மானேஜரிடம் அல்லது அரசாங்க பிரசுரங்களை விற்கும் ஏஜண்டிடமும் கிடைக்கும். விலை ஒவ்வொரு உத்திரவின் பிரதியும் ஒரு அணா.

உண்மையை உணர்ந்து உங்கள் உரிமையைக் கேளுங்கள்

டில்லி கைத்தொழில் சிவில் சப்ளை இலாகாவால் வெளியிடப்பட்டது.

AAA—1214—TM

காலக்ஷேபம்

காரணம் அதுதான்!

வந்தவர்:—கரும்பு விலை என்ன அப்பா?

கடைக்காரன்:—கழி ஒன்று ரெண்டணாவுங்க.

வந்தவர்:— என்ன, ரெண்டணாவா! கரும்பு காய்ந்து கிடக்கிறதே! அடுப்பு எரிக்கத்தான் உதவும் போலிருக்கிறது! இதற்கா இந்த விலை?

கடைக்காரன்:—அதனாலே தானுங்க ரெண்டணா? புதுக் கரும்பு அரையணாவுக்குத் தானுங்க வித்துக்கிட்டிருந்தேன்!

—எஸ். ஆர். மணி.

★

தெரிகிறது!

கோவில் தர்மகர்த்தா:—இந்தக் கோவிலில் எந்தக் காரியமானாலும் சரி, நான்தான் கவனித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. நான் இல்லாவிட்டால் ஒன்றும் நடக்காது. உத்ஸவமா, நான்தான் ஏற்பாடு செய்கிறேன்; அபிஷேகமா, நான்தான் கவனிக்கிறேன்; ஸ்வாமி புறப்பாடா, நான் கவனித்தால்தான் உண்டு.

நண்பர்:—தம்பட்டம்கூட நீரே அடித்துக்கொள்ளுகிறீர் என்று தெரிகிறது!

—ஆர். சங்கரநரசிம்மன்.

★

சிரமம் உங்களுக்குத்தான்!

கனபாடிகள்:—என்ன சாஸ்திரிகளே! கவர்மெண்டிலே எல்லாவற்றுக்கும் கண்ட்ரோல் கொண்டுவந்து விட்டார்களே! இந்த வரதக்ஷிணைக்கும் ஒரு கண்ட்ரோல் கொண்டுவந்து ஒரு தொகையை நிர்ணயம் செய்து விட்டால் நன்றாயிருக்கும்!

சாஸ்திரிகள்:—எடுத்ததற்கெல்லாம் கண்ட்ரோல் கொண்டுவந்து விடுவார்கள். ஆனால், நீர்தான் சிரமப்பட வேண்டிவரும். உமக்கு ஐந்து பெண்கள் இருக்கிறார்கள்! அவ்வளவு பேருக்கும் 'பிளாக் மார்க்கெட்'டில் எப்படி மாப்பிள்ளை தேடுவீர்?

—கோமதிஸ்வாமிநாதன்.

நம்பாதே!

நீதிபதி:—அவன்தான் குற்றவாளியென்று ஒப்புக்கொள்கிறானே, நீங்கள் ஏன் 'குற்றவாளியில்லை' என்று வாதாடுகிறீர்கள்?

வக்கீல்:—ஐயோ, அவன் பெரிய கேடியாயிற்றே, அவனை நம்பாதீர்கள்!

—பி. கே. கிருஷ்ணமூர்த்தி.

★

வருந்தவேண்டியது!

ஒரு பத்திரிகாசிரியரிடம் சென்று ஒரு எழுத்தாளர் தன்னைப் பற்றி அறிமுகப்படுத்திக்கொள்ளும் பொழுது சொன்னார்:

"பாரதியார் இறந்த அன்றைக்கு நான் பிறந்தேன்!"

பத்திரிகாசிரியர்:—இரண்டும் வருத்தப்படவேண்டிய விஷயங்கள்தான்!

ஜி. முத்துக்கிருஷ்ணன்.

★

சிரமம் வீண்தானா?

பிராஞ்சு போஸ்ட் மாஸ்டர்:—மணியார்டர் பாரத்தில் மூன்று ரூபாய் மாத்திரம் என்று எழுதுங்கள்.

கிராமவாசி:—என் மாப்பிள்ளை கேட்ட மூன்று ரூபாயையும் எவ்வளவோ சிரமப்பட்டு அனுப்புகிறேன். நீங்கள் மூன்று ரூபாய் மாத்திரம் என்று எழுதச் சொல்கிறீர்களே, என்ன ஸார்!

—கே. வி. ஸ்ரீனிவாசன்.

★

நற்சாக்ஷி!

முதலாளி:—நீ திவான் பகதூர் திருவேங்கடம் பிள்ளையிடம் வேலை பார்த்ததாகச் சொல்லுகிறாயே, அவருடைய நற்சாக்ஷிக் கடிதாசி ஏதாவது வைத்திருக்கிறாயா?



வேலைதேடி வந்தவன்:— கடிதாசி என்னாத்துக்குங்க? இதோ அவருடைய பேர் எழுதியிருக்கும் பவுண்டன் பேனாவையே பாத்துக்கிங்க!

—க. மு. சொக்கலிங்கம்.

காரணம் நான்தான்



வஸந்தன்

★



நினைக்க நினைக்க எனக்கு ஆச்சரியமாய்த்தா னிருக்கிறது. எதற்காக இவர்கள் என்னை இப்படிக் கேட்கிறார்கள் என்பதுதான் எனக்குப் புரியவில்லை. யார், என்ன கேட்கிறார்கள்? — என்கிறீர்களோ? யாருக்காக இராப் பகலாக ஆஸ்பத்திரியில் கண்ணை விழித்துக் கொண்டு சிச்ருஷை செய்தேனோ, அந்த நோயாளிகள் உடம்பு குணமாகி வீட்டுக்குப் போகும்போது கேட்கிறார்கள். "கல்யாணத்தைப் பண்ணிக் கொண்டு குடியும் குடித்தனமுமாக இருக்க வேண்டிய சமயத்தில் ஏன் உனக்கு இந்த உத்தியோகம்? வியாதிக்காரர்களுக்கு மத்தியில் இப்படிக் காலந் தள்ளுவதற்கு உனக்கு வெறுப்பாக இல்லையா?" என்று கேட்கிறார்கள். உடம்பு குணமாகி வீட்டுக்குப் போகும் போது அவ்விதம் கேட்கிறார்களே ஒழிய அதற்கு முன்னால் கேட்கவில்லை.

இந்த இரண்டு வருஷங்களாக நான் ஆஸ்பத்திரியின் நர்ஸாக எத்தனையோ பேர்களுக்குத் தொண்டு செய்து வருகிறேன். இந்த வேலையில் நான் கரை காணாத சந்தோஷத்தை அடைகிறேன்: நோயாளிகள் உடம்பு குணமாகி வீட்டுக்குப் போகும்போது, அவர்கள் முகத்தில் தோன்றும் ஜீவகளையையும் நன்றி ததும்பும் முகத்தையும் பார்த்துப் பரவசம் அடைகிறேன். என் வாழ்நாள் முழுவதையும் இப்படியே கழித்துவிடத் தயார்.

ஆஸ்பத்திரிக்கு வயோதிகரான நோயாளி யார் வந்தாலும் சரி, அவர்களுக்குச் சிச்ருஷை செய்வதில் எனக்கு அலாதி ஆனந்தம். அவர்களைப் பார்க்கும்போதெல்லாம் காலம் சென்ற தந்தையின் நினைவு வந்து விடும்.

அன்றைக்கு எனக்கு ராத்திரி வேலை. நான் அஸ்தமனச் சமயத்திலேயே சாப்பாட்டை முடித்துக் கொண்டு ஆஸ்பத்திரிக்குக் கிளம்பினேன். என் அறைக்குப் போய் உடுப்பை மாற்றிக் கொண்டு வார்டுக்குப் புறப்பட்டேன். நான் வார்டுக்கு வந்து கொண்டிருந்த சமயம் தள்ளு வண்டியில் ஒரு புதிய கேஸ் வந்துகொண்டிருந்தது. அதில் பிரக்ஞையற்றுப் போய் ஒரு கிழவன் கிடந்தான். வயது ஐம்பது இருக்கும். தலை வழுக்கை, அடர்ந்து வளர்ந்திருந்த மீசை. ஆனால் வலுவான உடல். வண்டிக்குப் பின்னால் நர்ஸ் பரிமளம் வந்து கொண்டிருந்தான். "ஸரோஜா! இது உன் கேஸ்தான். கிழவனுக்கு வயிற்றில் கத்திக் குத்து. ஆபத்தான கேஸ்" என்றான்.

நான் வண்டியுடன் கூடவே சென்றேன். டாக்டர் மறு நிமிஷம் வந்துவிட்டார். காயத்துக்கு மருந்து வைத்துக் கட்டி ஊசி போட்டாயிற்று. ஆகாரமும் உள்ளே செலுத்தியாகி விட்டது. கிழவன் சில நிமிஷங்களுக்குப் பின் மெதுவாகக் கண் விழித்துப் பார்த்தான். அந்த நோயாளியை சர்வ ஜாக்கிரதையாகக் கவனித்துக் கொண்டேன். ஒரு வாரம் ஆயிற்று. கிழவனுடைய உடம்பு கொஞ்சம் கொஞ்சமாகக் குணமாகிக் கொண்டு வந்தது.

பேசக்கூடிய நிலைமை வந்தது. அவன் பெயர் ரத்தினத் தேவன் என்று சொன்னான். அவன் கிராமத்தில் ஏற்பட்ட ஏதோ தகராறில் இந்தக் கத்திக் குத்து கிடைத்தது. அவனுக்கு ஒரே ஒரு பெண் தானும். அவள் கல்யாணமாகி அதே

"அதில் என்ன சந்தேகம்? ஆறு அல்லது ஏழு நாளைக்கு முன் இந்தக் கேள்வி கேட்டிருந்தால் சந்தேகமாய்த் தான் பதில் சொல்லியிருப்பேன். இப்பொழுது பயமே வேண்டியதில்லை. ஒரு நாள் கிழவனுக்கு ஆச்சு போச்சு



ஊரில் புருஷனுடன் குடித்தனம் செய்கிறாளாம். — இந்த விவரமெல்லாம் கேட்டுத் தெரிந்து கொண்டேன்.

அன்று சாயங்காலம் நான் வேலை முடிந்து என் அறையை நோக்கிச் சென்று கொண்டிருந்தேன். எதிரே ஒரு நாட்டுப் புறத்துப் பெண் கையில் ஒரு குழந்தையுடன் வந்து கொண்டிருந்தாள். அவளுக்குச் சற்றுப் பின்னால் ஒரு வாலிபன் வந்துகொண்டிருந்தான். "அம்மா! இங்கேதானே ரத்தினத் தேவர் என்று ஒரு நோயாளி இருக்கிறார்?" என்று அந்தப் பெண் கேட்டாள்.

அவர்கள் கிழவன் மகளும் மாப்பிள்ளையுந்தான் என்று ஊகித்துக் கொண்டேன்.

"உன் அப்பா பிழைத்துக் கொண்டு விட்டார். கவலைப்பட வேண்டாம்" என்றேன். உண்மையில் அவள் முகத்தில் கவலை குடிகொண்டிருந்தது. கிழவன் இருந்த இடத்திற்கு அடையாளம் சொல்லி விட்டு, நான் என் அறைக்குச் சென்றேன்.

சிறிது நேரம் கழித்து நான் வெளியே வந்தேன். அதற்குள், பெண்ணும் மாப்பிள்ளையும் கிழவனைப் பார்த்து விட்டு வந்து விட்டார்கள். "கிழவனைப் பார்த்தீர்களா? இன்னும் ஒரு வாரத்தில் எல்லாம் குணமாகி வீட்டுக்கு வந்து விடுவான். கவலைப்படாதீர்கள்" என்று மீண்டும் கூறினேன்.

"நிச்சயமாகப் பிழைத்துக் கொள்வாரா?" என்று அந்தப் பெண் வருத்தமான குரலில் கேட்டாள்.

என்று ஆகி விட்டது. நான் சிரத்தை எடுத்துக் கொண்டிருக்காவிட்டால் கிழவன் 'க்ளோஸ்'தான்" — இப்படி நான் சொல்லிக் கொண்டிருக்கும் போது, அந்தப் பெண்ணின் முகத்தில் சொல்ல முடியாத வேதனை குடிகொண்டது.

"அப்படியானால் நீங்கள் அவ்வளவு பாடுபட்டிருக்காவிட்டால் நிச்சயம் அவர் போயிருப்பார். ....ஐயோ, பாவம் நீங்கள் கஷ்டப்படாமல் இருந்திருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்?" என்றாள். எனக்குத் தூக்கி வாரிப் போட்டது.

"தாயம்மா! என்ன உளறுகிறாய்?" என்றான் அவள் புருஷன்.

"நான் கஷ்டப்படாமலிருந்தால் உன் அப்பா போயிருப்பார். அவ்வளவு தான்" என்றேன்.

"அதுதான் சொல்கிறேன்! அப்பா போயிருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்" என்றாள் அவள் மறுபடியும். நான் அடைந்த அதிர்ச்சி இவ்வளவு அவ்வளவு அல்ல. எவ்வளவோ கஷ்டப்பட்டு ஒரு உயிரைக் காப்பாற்றி யிருக்கிறேன். சொந்தத் தகப்பனைக் காப்பாற்றியதற்குச் சந்தோஷப்படா விட்டால் போகட்டும்; அதற்காக ரொம்பவும் வருத்தப்படுகிறாள் போலல்லவா இருக்கிறது?

"ஏன் அம்மா! உனக்கும் அப்பாவுக்கும் ஏதாவது சண்டையா?" என்றேன் நான்.

"அதை ஏன் கேட்கிறீர்கள் அம்மா! எனக்குக் கல்யாணமாகி நாலு வருஷமாக அவர் மாப்பிள்ளையுடன் ஓயாமல்


சண்டை போடுகிறார். இவருக்குக் கொஞ்சம் கிலபுலன் உண்டு. அப்பா மாப்பிள்ளைக்குத் தெரியாமல் பணத்தை எடுத்துக் கொண்டுபோய்க் குடிப்பது வழக்கமாகி விட்டது. நானும், 'அப்பா! வயதாச்சு! பேரன் பேத்தி எடுத்தாகி விட்டது. இனிமேலாவது அதை யெல்லாம் விட்டொழிக்கக்கூடாதா?' என்று கேட்பேன். ஆனால் அவர் கேட்பதில்லை. இதனால் அப்பாவுக்கும் மாப்பிள்ளைக்கும் பேச்சு வார்த்தை தடித்து வந்தது. பத்து நாட்களுக்குமுன் சண்டை வலுத்துப் போய் விட்டது.

"அன்று ராத்திரி அப்பா பக்கத்திலிருந்த ஊர் சந்தையிலிருந்து திரும்பி வரும்போது, யாரோ அவரைக் குத்தி விட்டார்கள். நாங்கள் இதைக் கேட்டு ஓட்டமாக ஓடி அவரை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வந்தோம். ஊரில் பலர் அப்பாவுக்கு விரோதிகள். யார் குத்தினார்கள் என்று தெரியவில்லை. ஆனால் அப்பாவோ மருமகன்தான் குத்தி விட்டதாகச் சாதிக்கிறார்."

"அப்புறம்?" என்றேன் நான்.

ஆசிரியர் மனைவி

ஒரு முறை, பிரபல நாடகாசிரியரான ஜார்ஜ் பெர்னார்ட்ஷாவின் வீட்டுக்கு ஒரு நண்பர் போயிருந்தார். பெர்னார்ட்ஷா அவருடன் மிக்க குஷாலாகப் பேசிக்கொண்டிருந்தார். பேச்சுக்கு மத்தியில் பலவிதமான கதைகள் சொல்லிக் கொண்டே போனார்.



அவருடைய மனைவி ஒரு மூலையில் உட்கார்ந்து ஏதோ பின்னிக் கொண்டிருந்தாள். நண்பர் அவளைப் பார்த்து, "என்ன அம்மா பின்னுகிறீர்கள்?" என்று கேட்டார்.

"ஒன்றும் இல்லை. இவர் சொல்லும் கதைகளை நான் ஆயிரந்தடவை கேட்டிருக்கிறேன். இந்தக் கைக்கு ஏதாவது வேலை கொடுக்காவிட்டால் அவருடைய மென்னியை முறித்துவிடலாம் என்று தோன்றும். அதற்காகத்தான் இந்த மாதிரி ஏதாவது பண்ணிக் கொண்டிருக்கிறேன்!" என்று பதில் கூறினாள் ஸ்ரீமதி பெர்னார்ட்ஷா.

"ஆனால் குத்தின ஆள் யாரென்று தெரியாததினாலே என் வீட்டுக்காரரைப் போலீசார் ஒன்றும் செய்யவில்லை. ஆனால் அப்பாவோ, மாப்பிள்ளை மேல் குற்றம் சாட்டுகிறார். 'நான் அந்தப் பயலை சும்மா விடப்போகிறதில்லை. உடம்பு வாசியானதும் பழிவாங்காவிட்டால் நான் ரத்தினத்தேவன் இல்லை' என்று சொல்லுகிறாராம்! அவருக்கு உடம்பு குணமாகி ஊருக்கு வந்தவுடனே ஏதாயினும் ஆபத்து நேர்ந்தால் என்ன செய்கிறது? இந்தப் பாவி பிழைத்துக் கொள்ளுவாரென்று சொன்னாயே, அம்மா? நான் என்ன செய்வேன்?" என்று கண்ணீர் வடித்தாள்.

கிணறு வெட்டப் பூதம் புறப்பட்ட கதையாக ஆகிவிட்டதே என்று மனம் நொந்தேன். நான் ஏற்றுக் கொண்டிருக்கும் இந்த வேலையினால் எத்தனையோ பேருக்கு ஆனந்தமும் ஆறுதலும் உண்டாகும் என்று நினைத்தேன். ஆனால் அதனால் பிறருக்கு இவ்வளவு துன்பம் உண்டாகுமென்று நான் கனவிலும் நினைக்கவில்லை.

"கவலைப்படாதே! உன் புருஷனுக்கு ஒரு ஆபத்தும் நேராது" என்று சமாதானம் சொல்லி யனுப்பினேனே தவிர, என் மனம் என்ன ஆகுமோ என்று தவித்துக் கொண்டிருந்தது.

நாட்கள் ஆயின. கிழவன் உடம்பு குணமாகிக் கொண்டு வந்தது. அவன் முகத்தில் ஒரு அழுத்தத்தையும் கண்களில் ஒரு கொடூரத்தையும் பார்த்தேன். தாயம்மாள் சொன்னது அப்பொழுது எனக்கு நினைவு வரவே, என் உடம்பு சிலிர்த்தது. நிச்சயம் ஏதோ விபரீதம் விளையப் போகிறதென்று எனக்குத் தோன்றியது.

அன்று சாயங்காலம் கிழவன் கால்களில் இருந்த சில காயங்களுக்கு மருந்து கட்டிக் கொண்டிருந்தபோது மெதுவாகப் பேச்சை ஆரம்பித்தேன்.

"கிழவா! இங்கே பார்! இன்னும் இரண்டு தினங்களில் நீ ஊருக்குப் போய் விடுவாய். உன் உடம்பு குணமாகி விட்டது. ஆனால், எல்லா சமாசாரத்தையும் உன் மகள் என்னிடம் சொன்னாள்" என்றேன்.

சட்டென்று கிழவன் தூக்கிவாரிப் போட்டவனாய் என் முகத்தைப் பார்த்தான். இத்தனை நாள் கட்டின பசுவைப் போல் இருந்த அவன் முகத்தில் பாயும் புலியின் உக்கிரம் தாண்டவமாடியது.

"உண்மையில் எனக்கு நன்றி காண்பிக்க வேண்டுமானால் எனக்கு நீ

சத்தியம் செய்து கொடுக்க வேண்டும், உன் மாப்பிள்ளையை ஒன்றும் செய்வதில்லை என்று" என்றேன். கிழவன் எரித்து விடுபவன்போல் என் முகத்தைப் பார்த்தான்.

"என்ன, அம்மா! சத்தியம் கித்தியம் என்றெல்லாம் பேசுகிறே? ... அம்மா! இந்த வம்பெல்லாம் உனக்கு என்னத்துக்கு? எனக்கு உயிர் ஒரு பெரிசு இல்லை. மானம்தான் பெரிசு. என் சொந்த மகனாக இருக்கட்டும், அவமானப் படுத்தினால் லகுவிலே விடமாட்டேன். என் மருமகன் பார்க்கிறதுக்குச் சாதுவாகத்தான் இருப்பான். அவனைப் போல அயோக்கியன் உலகத்திலே கிடையாது" என்று ஆரம்பித்து விட்டான் கிழவன்.



பிரசங்கி:—சமயப் பிரசங்கம் செய்வதற்கே என் வாழ் நாளை அர்ப்பணம் செய்து விட்டேன். அதற்காக நான் கொஞ்சங்கூட வருத்தப்பட வில்லை.

கூட்டத்தில் ஒருவர்:—அதற்காக நீங்கள் ஏன் வருத்தப் பட வேண்டும்?

மறு நாள் மாலை கிழவன் ஆஸ்பத்திரிக்கு எதிரிலுள்ள தோட்டத்தில் உலாவுவதற்காக வந்துகொண்டிருந்த பொழுதுதான் எதிர்பாராத விபத்து ஏற்பட்டது. சற்று முன் மழை பெய்து படிக்கட்டு நனைந்திருந்ததால், கிழவன் வழுக்கிப் படிக்கட்டில் விழுந்தான். நிலைதவறிப் போய்க் கீழே சாயவே நாலைந்து படிக்கட்டில் உருண்டு தொப்பென்று தரையில் விழுந்தான். நான் ஓட்டமாக ஓடிப் பார்த்தேன்.

பட்ட காலிலே படும் என்றபடி காயம் பட்ட இடத்திலே மறுபடியும் அடி பட்டு விட்டது. 'ஸ்ட்ரெச்சரில்' போட்டுக்கொண்டு போனோம். மறுபடியும் நிலைமை கவலைக்கிடமாகி விட்டது. ஜுர ஜன்னி கண்டு பிதற்ற ஆரம்பித்தான் கிழவன். நான் இரவு முழுதும் கண் அயராமல் 'ஐஸ்' பையைத் தலையில் வைத்துக் கொண்டிருந்தேன்.

சரியாக இரவு ஒரு மணியிருக்கும், கிழவனின் கை கால் ஜில்லிட்டுவிட்டது. ஒரு இன்செக்ஷன் கொடுத்தால்தான் சூடு வரும். உடனே டாக்டருக்குத் தெரிவிக்க வேண்டும். உடனே வைத்திய உதவி அளிக்கா விட்டால், கிழவன் பிராணன் போய்விடும். டாக்டரைக் கூப்பிடுவதா? வேண்டாமா? நான் என் கடமையைச் செய்வதா, வேண்டாமா? என் கடமையைச் செய்யாவிட்டால் கிழவன் உயிர் போகும். அவன் பிழைத்துக் கொண்டாலோ, அடியோடு ஒரு குடும்பம் நாசமாய்ப் போகப் போகிறது.

சிறிது நேரம் என்ன செய்வதென்று தெரியாமல் தவித்தேன். வேதனையில் கிழவன் முனகும் குரல் என்னை வதைத்தது. ஏதோ ஒரு உணர்ச்சியால் தூண்டப்பட்டு ஓட்டமாக ஓடினேன். வெளியேயிருந்த ஆளைக் கூப்பிட்டு நோயாளியின் நிலைமையைச் சொல்லி டாக்டரை அழைத்து வரச் சொன்னேன்.

டாக்டர் சில நிமிஷங்களில் வந்து விட்டார். மருந்தும் கொடுத்தாயிற்று. கிழவன் நிம்மதியாகத் தூங்க ஆரம்பித்தான். என் மனத்திலிருந்த பளு அப்பொழுதுதான் அகன்றது போலிருந்தது. ஒரு உயிரைக் காப்பாற்றி விட்டோம் என்ற பெருமிதத்தில் நான் மறு நாள் காலை வீட்டுக்குத் தலை நிமிர்ந்து நடந்து சென்றேன்.

என் மனத்தில் நிச்சயமாக ஒரு நம்பிக்கை இருந்தது.—உடம்பு குணமானதும் கிழவனுடன் பேசி, அவன் பிடிவாதத்தைத் தளரச் செய்துவிடலாம் என்பதுதான். அப்படியும் கிழவன் பிடிவாதமாக இருந்தால், மேலே என்ன செய்வதென்று நான் அதற்கும் யோசித்து வைக்காமல் இல்லை.

அன்று சாயங்காலம் அவனுடன் பேசி முடிவு செய்யலாம் என்று நினைத்தேன். ஆனால், என்ன அதிசயம்! காலையில் வார்டுக்குப் போனபோது, கிழவன் படுக்கை காலியாக இருந்தது. "அவன் எங்கே?" என்று பக்கத்திலுள்ளவர்களைக் கேட்டேன். "ராத்திரி இரண்டு மணிக்கு எழுந்து வெளியில் போனவன் வரவேயில்லை" என்றான் ஒரு நர்ஸ். "கெட்டது காரியம்! வந்தது மோசம்" என்று கூவினேன்.

கிழவன் மாப்பிள்ளை மேல் பழி வாங்கும் உத்தேசத்துடன்தான் என்னிடம் சொல்லாமல் கொள்ளாமல் ஓடியிருக்

கிறான் என்பது தெளிவாய்ப் போய் விட்டது. இந்த விபரீதத்தை எப்படித் தடுப்பது, என்ன செய்வது?—ஒன்றும் புரியாமல் திகைத்தேன்.

இரண்டு தினங்களுக்குப் பின்னர் நான் ஆஸ்பத்திரியி லிருந்து அறைக்கு வந்து கொண்டிருந்தேன். வாசலில் யாரோ பெண் நின்றுகொண்டிருந்தாள். அருகில் வந்து பார்த்தேன். தாயம்மாள் தான் அது! அவள் கவலை குடிகொண்ட முகத்தைப் பார்த்தபோதே, என் அடி வயிற்றைக் கலக்கியது. கண்களில் நீர் ததும்ப என் காலடியில் விழுந்து விட்டாள். என் உடலும் நடுங்க ஆரம்பித்தது. "தாயம்மா! கிழவன்......" என்று கூறித் தடுமாறினேன். "ஆமாம். எல்லாம் உங்களால்தான்" என்றாள் தாயம்மாள்.

என் உடல் முழுதும் சிலிர்த்தது. ஏதோ குற்றம் ஒன்றைச் செய்துவிட்டவள் போல் தலை கவிழ்ந்தேன். "அம்மா! நீங்கள் மட்டும் என் விஷயத்தில் இவ்வளவு அக்கரையாக இல்லாவிட்டால், கிழவன் புத்தி திரும்பி யிருக்காது. மனுஷனே புதுமாதிரியாகி விட்டார். அவர் அசட்டுத்தனமாய்ப் பேசிய பிறகுகூட, நீங்கள் அவர் உயிரைக் காப்பாற்றி யதை நினைத்து நினைத்து இப்பொழுது பூரித்துப் போகிறார். 'உலகத்தில் இவ்வளவு நல்லவர்கள் இருப்பார்களா?' என்று ஆச்சரியப்படுகிறார். இப்பொழுது மாப்பிள்ளையிடம் அன்னியோன்னியமாகவும் இருக்கிறார்."

"என்ன சொல்கிறாய்? உன் புருஷன் உயிரோடு இருக்கிறானா?"

தாயம்மாள் சிரித்தாள். "ஆபத்து ஒன்றும் இல்லை, அம்மா! சௌக்கிய மாக இருக்கிறார். எல்லாம் உங்கள் ஆசிர்வாதத்தினால்தான்."

நான் ஆழ்ந்த பெருமூச்சு விட்டேன். புயலும் மழையும் திடீரென்று ஓய்ந்து நிர்மலமான மாலை வேளையில் தென்றல் காற்று வீசுவதுபோல் இருந்தது.

"ஆமாம்; நல்ல புத்தியோடு போயி ருந்துதான் போனான். என்னிடம் சொல்லிக் கொள்ளாமல் ஏன் ஓடினானாம்?" என்றேன்.

"நீங்கள் அவரைப் போலீசிலே ஒப் பிக்கிறதாகப் பேசிக்கொண்டிருந்தீர்களாம். அதனால்தான் அவர் பயந்து கொண்டு ஓடி வந்து விட்டாராம். அதற்காக உங்களிடம் மன்னிப்புக் கேட்கச் சொன்னார்."

"அட பைத்தியமே! அவன் பழி வாங்குவதில்லை என்று சத்தியம் செய்து கொடுக்கா விட்டால்தான் போலீசிலே சொல்கிறதாக இருந்தேன். நான் சிநேகிதிகளோடு பேசிக் கொண்டிருந்ததை அரைகுறையாகக் கேட்டு விட்டு ஓட்டம் எடுத்திருக்கிறான் போலிருக்கிறது. போகட்டும், இரண்டு தினங்களுக்கு முன் எனக்கு உலகமே வெறுத்து விட்டது. ஏன் இந்த வேலைக்கு வந்தோம் என்று நினைத்தேன். நல்ல வேளை; நான் பிழைத்தேன்" என்றேன்.

தாயம்மாள் மடியிலிருந்த ஜவந்திப் பூச்செண்டை எடுத்து என்னிடம் கொடுத்து "மாங்கல்யப் பிச்சை கொடுத்தீர்கள். இந்தாருங்கள்" என்றாள், கண்களில் நீர் ததும்ப. அதை வாங்கிக் கொண்டு அவளுக்கு விடை கொடுத்தனுப்பி விட்டு மாசுமறுவற்ற என் வெள்ளை உடையைப் பார்த்துப் பெருமையுடன் நடந்து சென்றேன்.

ஆமாம், ஸார்!



உபாத்தியாயர்: "ஏண்டா, கணபதி! எட்டும் ஏழும் என்னடா என்றால்......

...பதில்சொல்லாமல் பிடித்து வைத்த பிள்ளையார் மாதிரி நிற்கிறாயே?......

............வாயிலே கொழுக் கட்டையா இருக்கு?"
"ஆமாம், ஸார்!"

நவீன சந்திர விலாஸ்

ராஜு

கையில் அழகான பிரம்பு, உடம்பில் ஓர் உயர்ந்த பட்டுச் சட்டை, அதன் மேல் கருப்பு அல்பாகா கோட்டு, தலையில் விலையுயர்ந்த ஜரிகைத் தலைப்பா, இடுப்பில் மஸ்லின் துணி, காலில் பர்மா செருப்பு. இவைகளை அணிந்துகொண்டு டாக், டாக் என்று வேகமாக நடந்துகொண்டு வந்திருந்தார் வேதகிரி முதலியார். தாசில்தார் வேதகிரி முதலியார் என்றால் அவ்வூரில் யாவருக்கும் தெரியும். வேதகிரி முதலியார் மிகவும் நல்லவரானாலும் அவரிடமிருந்து ஒரு காலணா கிளம்புவது மிகவும் சிரமம்.

முதலியார் கடை வீதி வழியாக வரும் பொழுது திடீரென்று ஒரு கடையின் முன் நின்றார். அக்கடையின் முன் பக்கத்தில் ஒரு பலகை தொங்க விடப்பட்டிருந்தது. அப்பலகையில் "நவீன சந்திர விலாஸ். இவ்விடத்தில் எல்லா சாமான்களும் கிடைக்கும்" என்று எழுதி யிருந்தது. கடையின் எதிரில் திடீரென்று நின்ற முதலியார் கடைக்குள் நுழையவில்லை. ஆனால் நின்ற இடத்தில் இருந்து கொண்டு கீழேயே பார்த்தபடி இருந்தார், அவருடைய பார்வை பூமியில் கிடந்த ஏதோ பளபளப்பான வஸ்துவின் மீது சென்றது. அந்த வஸ்துவை எடுத்துக்கொள்ள முதலியார் ஆசைப்பட்டார். மெதுவாகத் தம் வலது கால் கட்டை விரலினால் அவ்வஸ்துவை அசைத்துப் பார்த்தார். ஆனால் அந்த வஸ்துவை அசைக்க முடியவில்லை.

பிறகு இங்கும் அங்குமாகப் பார்த்துக் கொண்டார். மெதுவாகத் தம் கோட்டுப் பையிலிருந்து ஒரு பட்டுக் கைக்குட்டையை எடுத்தார். ஆனால் முகத்தைத் துடைத்துக் கொள்வது போல் பாவனை செய்து கைக்குட்டையைக் கீழே தவறி விடுவதுபோல் விட்டார். அந்தக் கைக்குட்டை பளபளப்பான வஸ்துவின் மீது விழுந்தது. தம்மை யாராவது பார்க்கின்றார்களா என்று இப்படியும் அப்படியுமாகப் பார்த்து விட்டுக் கீழே குனிந்தார். கைக்குட்டையை எடுக்கும் பாவனையாகக் கைக்குட்டையுடன் அந்தப் பளபளப்பான வஸ்துவையும் எடுக்கப் பார்த்தார். ஆனால் அப்பொழுது அவர் ஏமாற்றம் அடைந்தார். அவர் கையுடன் அவர் கைக்குட்டை வந்ததே தவிர அந்தப் பளபளப்பான வஸ்து வரவில்லை.

வேதகிரி முதலியாருக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. அந்தப் பளபளப்பான வஸ்துவை விட்டு விட்டுப் போகவும் இஷ்டமில்லை. மெதுவாகத் தம் சட்டைப் பையிலிருந்த ஓர் கூர்மையான கத்தியை எடுத்தார். தன்னை ஒருவரும் பார்க்காத சமயத்தில் கீழே உட்காருவது போல் உட்கார்ந்தார். தான் வைத்திருந்த கத்தியினால் மெதுவாக அந்தப் பளபளப்பான வஸ்துவை பூமியிலிருந்து கிளப்பப் பார்த்தார் அப்படியும் முடியவில்லை.

அப்பொழுது "ஸார், ஸார்!" என்று உரக்கக் கூப்பிட்டுக் கொண்டே ஒருவன் கடையினின்று வேதகிரி முதலியாரிடம் ஓடி வந்தான். தாசில்தார் வேதகிரி முதலியாரின் உடல் நடுங்கிற்று. நாக்குப் பேச முடியாமல் குழறிற்று. திருடன் போல் எழுந்து நின்று விழித்தார். கடையிலிருந்து வந்தவன் "ஸார்! நீங்கள் எவ்வளவோ முயன்றும் இந்த ரூபாயை பூமியினின்று உங்களால் எடுக்க முடிந்ததா! இந்த ரூபாயை இதோ என் கையில் வைத்திருக்கும் கோந்தினால் தான் கீழே ஒட்டி வைத்திருந்தோம். இந்தக் கோந்தினால் காகிதம் முதல் எல்லாப் பொருள்களையும் ஒட்டவைக்கலாம். ஒரு பாட்டில் விலை ரூபாய் இரண்டுதான். இந்தாருங்கள்" என்று சொல்ல, வேதகிரி முதலியார் இரண்டு ரூபாயைக் கொடுத்து விட்டுப் பேச்சு மூச்சில்லாமல் பாட்டிலை வாங்கிக் கொண்டு அவ்விடத்தை விட்டு அரை நொடியில் நகர்ந்து சென்றார்.

11

லண்டனிலுள்ள ஒரு பெரிய மனிதர் தன் நண்பர் ஒருவரிடம் தனக்கு நேர்ந்த வேடிக்கையான அகஸ்மாத் சம்பவம் ஒன்றை வர்ணித்துக் கொண்டிருந்தார்: "நான் ஒரு நாள் வெளியூருக்குச் சென்றிருந்தேன். அன்று என்ன மாதம் என்ன தேதி என்று பார்த்தேன். பதினோராவது மாதம் பதினோராவது தேதி என்று தெரிந்தது. நான் தங்கிய வீட்டு நம்பரைக் கவனித்தேன். 11-ம் நம்பர் வீடா யிருந்தது. ரேஸுக்குப் போனேன். பதினோராம் நம்பர் குதிரை மீதே 11 ரூபாய் பணம் கட்டினேன். முதற் பரிசு கிடைத்தது என்கிறீர்களா? அதுதான் இல்லை. ரேஸில் குதிரையும் 11-வது குதிரையாக வந்து சேர்ந்தது!"

ஊசிமூக்கு ராஜகுமாரி

வி. ஜி.

பாதாள தேசத்து எலி ராஜா ரொம்பப் பொல்லாத ராஜா. அவருடைய தேசத்தில் ஆனைப்பட்ட சூரியபகவானே தலைகாட்ட முடியாதென்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்! எந்த தேசத்தில் பஞ்சம் வந்தாலும் அவருடைய தேசத்தில் மட்டும் பஞ்சமே வராது. அத்தனை உணவுப் பொருட்களை அவர் தம் தேசத்தில் சேமித்து வைத்துக்கொண்டிருந்தார்.

அந்த ராஜாவுக்கு ஒரு அழகான பெண். அவள் பெயர் ஊசிமூக்குக் குமாரி. அடே. அப்பா! அவள் எவ்வளவு அழகு தெரியுமா? அவள் 'குடு குடு' வென்று ஓடுவதை அன்றைக்கெல்லாம் பார்த்துக்கொண்டிருக்கலாம்போல் தோன்றும். அவள் தன் காதுகளை அப்படியும் இப்படியுமாக அசைத்துக்கொண்டு, சின்னஞ்சிறு கைகளினால் இரை எடுத்துத் தின்னும் அழகு ஒன்றே போதும் அவளைக் கல்யாணம் செய்துகொள்வதற்கு! அவள் 'கீச் கீச்' என்று பாட ஆரம்பித்து விட்டால் யாருக்குமே அவளை விரட்ட மனம் வராது!

உலகத்திலுள்ள இளைய எலி ராஜாக்களெல்லாம் ஊசிமூக்குக் குமாரியைக் கல்யாணம் செய்து கொள்ள 'நான், நீ' என்று போட்டி போட்டனர். அந்தப் பெண்ணைத் தங்களுக்குக் கல்யாணம் செய்து கொடுக்காவிட்டால், அவர்கள் பாதாள தேசத்தின்மேல் படையெடுத்து வருவதாகவும் பயமுறுத்தினர். ஆனால், ஊசிமூக்குக் குமாரிக்கு வளை தேசத்து ராஜகுமாரனான ஊசிமூக்கு ராஜாவின்மேல் தான் ஆசை. அவளுடைய அப்பாவுக்கு மட்டும் அந்த ராஜகுமாரனைப் பிடிக்கவே பிடிக்காது. ஏன் தெரியுமா? அந்த ராஜகுமாரனுக்கு ஒரு பூனை மந்திரி. அந்த மந்திரியைக் கண்டால் எந்த எலி ராஜாவுக்குத்தான் பிடிக்கும்?

இத்தனைக்கும் ஊசிமூக்கு ராஜாவின் உத்தரவில்லாமல் அந்தப் பூனை மந்திரி ஒருவரையும் ஒன்றும் செய்வதில்லை. அப்படியிருந்தும், மற்ற எலி ராஜாக்களெல்லாம் ஏனோ அந்தப் பூனை மந்திரியைக் கண்டு பயந்தன!

ஊசிமூக்கு ராஜகுமாரியின் கல்யாண விஷயமாக, என்ன செய்வதென்றே எலி ராஜாவுக்குப் புரியவில்லை. "என்னத்திற்காக இவ்வளவு அழகான பெண்ணைப் பெற்றோம்?" என்று அவர் மிகவும் வருந்தினார். கடைசியில், தமது எலி மந்திரிகளைக் கூப்பிட்டு யோசனை கேட்டார். அவர்கள் 'சுயம்வரம்' வைத்து விடலாம் என்று யோசனை கூறினர்.

சுயம்வரம் என்றால் எல்லா தேசத்து ராஜகுமாரர்களும் ஒன்றாய் வந்து கூடுவார்கள். அவர்களில் யாரைத் தனக்குப் பிடிக்கிறதோ, அவருக்கு மாலையிட்டு மணந்து கொள்வாள் ராஜகுமாரி.

சுயம்வரம் நடக்கப் போகும் நாளைக் குறிப்பிட்டு எல்லா இளைய எலி ராஜாக்களுக்கும் ஓலை அனுப்பப்பட்டது. ஆனால், ஊசிமூக்கு ராஜகுமாரனுக்கு மட்டும் ஓலை அனுப்பவில்லை. இதனால் ஊசிமூக்கு ராஜகுமாரி அடைந்த வருத்தத்தைச் சொல்லி முடியாது. ஆனால், அவளுக்குச் சிறிது நம்பிக்கை இருந்தது. அதாவது, தன்னுடைய அப்பா ஊசிமூக்கு ராஜகுமாரனுக்கு ஓலை அனுப்பாவிட்டாலும், அவர்



எப்படியாவது சுயம்வரத்தன்று வந்து தனக்கு எதிரே நிற்பார் என்று அவள் நினைத்திருந்தாள்.



சுயம்வரத்தன்று எல்லா இளைய எலி ராஜாக்களும் கல்யாண மண்டபத்தில் வந்து கூடினர். கையில் மாலையுடன் அவர்கள் ஒவ்வொருவரையும் கவனித்துக் கொண்டே வந்தாள் ராஜகுமாரி. எல்லா ராஜகுமாரர்களும் மாலை அணிந்து கொள்வதற்காக, 'நான் முந்தி. நீ முந்தி' என்று எட்டிய வரைக்கும் கழுத்தை நீட்டினர். ராஜகுமாரி அவர்களை யெல்லாம் கவனிக்கவே யில்லை. அவளுடைய கண்கள் ஊசிமூக்கு ராஜகுமாரனைக் கண்டு பிடிப்பதில் முனைந்திருந்தன.

என்ன தேடி என்ன பிரயோஜனம்? எல்லா தேசத்து இளைய ராஜாக்களும்தான் வந்திருந்தனர். ஆனால், ஊசிமூக்கு ராஜாவை மட்டும் காணோம். ராஜகுமாரிக்கு எப்படி இருக்கும்? அவள் கண்கள் கலங்கின. அங்கே கூடியிருந்த ராஜகுமாரர்களில் ஒருவருக்காவது மாலையிட அவளுக்கு மனம் வரவில்லை. என்ன செய்வதென்று தோன்றாமல் அசைவற்று நின்று கொண்டிருந்தாள்.

இந்த நிலையில் தன் குமாரியைப் பார்த்துக் கொண்டிருக்க எலி ராணியால் முடியுமா? அவள் தன் குமாரியை நெருங்கி, "அழாதே. அம்மா! அழாதே! உனக்குப் பிடித்தமில்லாத ஒருவனுக்கு உன்னைக் கல்யாணம் செய்து கொடுத்து, உன் மனதை நோகவைக்கக் கூடாது என்றுதானே சுயம்வரம் வைத்திருக்கிறோம்? எத்தனையோ ராஜகுமாரர்கள் இங்கே கூடியிருக்கிறார்கள். அவர்களில் யாரை உன் மனதுக்குப் பிடிக்கிறதோ, அவருக்கு மாலையிடுவதில் உனக்கு என்ன வருத்தம், அம்மா! எவ்வளவோ சந்தோஷமா யிருக்க வேண்டிய இந்தச் சுபதினத்தில், நம் ஜன்ம விரோதியை மந்திரியாக வைத்துக் கொண்டிருக்கும் அந்த ஊசி மூக்கு ராஜாவை நினைத்துக் கொண்டு இப்படி யாராவது கஷ்டப்படுவார்களோ!" என்று தேற்றினாள்.

அப்பொழுதும் ஊசிமூக்கு ராஜகுமாரி தான் நின்ற இடத்தை விட்டு அப்படி இப்படி அசையவில்லை.


இந்தச் சமயத்தில் எங்கிருந்தோ ஊசிமூக்கு ராஜாவின் பூனை மந்திரி பாய்ந்து வந்து ராஜகுமாரியைக் கவ்விக்கொண்டு ஓடி விட்டது!

ஏமாற்றமடைந்த எல்லா இளைய ராஜாக்களும் பூனை மந்திரியைக் கண்ட மாத்திரத்தில், 'செத்தோம், பிழைத்தோம்!' என்று தங்கள் தங்கள் தேசம் வந்து சேர்ந்தன. தம் பெண்ணைப் பறிகொடுத்த எலி ராஜாவும் எலி ராணியும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து அழுதனர்.

மறுநாள் வளை தேசத்து ராஜாவின் தூதன் ஒருவன், பாதாள தேசத்து ராஜாவிடம் ஒரு ஓலை கொண்டு வந்து கொடுத்தான். அந்த ஓலையில் பின்வருமாறு எழுதியிருந்தது:

"ஏ, பாதாள தேசத்து ராஜாவே! பூனை வாயில் அகப்பட்டுக்கொண்ட உம்முடைய பெண்ணைப்பற்றி வீணாக வருந்திக் கொண்டிருப்பீரே என்றுதான் இந்த ஓலையை உமக்கு நான் எழுதுகிறேன். உம்மை ஏமாற்றவும் ஊசிமூக்கு ராஜகுமாரியின் எண்ணத்தைப் பூர்த்தி செய்யவும் செய்த தந்திரம்தான் இது! நாளைக்கு எனக்கும் உமது புத்திரியான ஊசிமூக்கு ராஜகுமாரிக்கும் வளைதேசத்தில் கல்யாணம். வேணுமானால் நீரும் வந்திருந்து எங்களை ஆசீர்வதிக்கவும்."

இப்படிக்கு,
ஊசிமூக்கு ராஜா.



சுதந்திர தாகம்

ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்

பாரதியார் தமது ஏடரைப் பார்க்கச் சாத்தூருக்குப் போனார். ஏடர் விசுவநாதர் குருவை நன்றாக உபசரித்து விருந்து வைத்தார். அவருடைய தகப்பனார், பாரதியாரை "உமக்கு என்ன தொழில்?" என்று கேட்டார்.

"ஐயா! நமக்குத் தொழில் கவிதை. நாம் சொல்லின் சிற்பி. பாடுவோம், பிரசங்கம் செய்வோம்" என்றார் பாரதியார்.

அப்போது அந்த ஊர்ப் பள்ளிக்கூடத்துத் தமிழாசிரியர் அங்கு வந்தார். அவருடைய தகப்பனாரிடந்தான் பாரதியார் தமிழ் கற்றுக் கொண்டது. தமிழ் ஆசிரியர், "பள்ளிக் கூடத்தில் இன்று திருக்குறளைப்பற்றிப் பிரசங்கம் நடக்கப்போகிறது. தாங்கள் தலைமை வகித்துப் பேசவேண்டும்" என்று அழைத்தார். "ஆஹா! ஆக்ஷேபணை யென்ன?" என்று பாரதியார் சந்தோஷமாக ஒப்புக் கொண்டார். ஆனால் தலைமை ஆசிரியர், "அரசியல் விஷயமாக மூச்சு விடக்கூடாது" என்று நிபந்தனை விதித்தார். "அப்படியே நடக்கும். ஓம் சக்தி!" என்றார் பாரதியார்.

மாலை ஆறு மணிக்குப் பள்ளிக்கூடத்தில் ஏராளமான கூட்டம் கூடிவிட்டது. ஊர்ப் பிரமுகர்கள் அனைவரும் வந்திருந்தார்கள். பாரதியார் வெகு மிடுக்காக வந்து மேடை மீது அமர்ந்து, மீசைக்குக் கவாத்து பயிற்றி, சிங்கப் பார்வை பார்த்த பிறகு எழுந்தார். அப்பொழுது காரியதரிசி, "கொஞ்சம் முன்னுரை சொல்லி விடுகிறேன்" என்றார்.

"அதெல்லாம் முடியாதய்யா! தலைவர் விருப்பப்படித்தான் கூட்டம் நடக்க வேண்டும். முதலில் நமது பிரசங்கம்" என்று பாரதியார் எதிரேயிருந்த ஹார்மோனியத்தைச் சுருதி கூட்டச் செய்தார்.

"தேடி உன்னைச்
சரணடைந்தேன்
தேச முத்து மாரி"


என்று வீராவேசமாகப் பாடத் தொடங்கி, இருபது நிமிஷம் பொழிந்து தள்ளி நிறுத்தினார். சபை வியந்து நின்றது. பாரதியார், "அக்கிராசனாதிபதி கடமை தீர்ந்தது. இனிப் பிரசங்கம் செய்யலாம்" என்றார். விசுவநாதபாரதியும் இன்னும் சில புலவர்களும் குறளடிகளைச் சாமாரியாகப் பொழிந்து பிரசங்கம் நடத்தினார்கள். தலைவர் முடிவுரை கூற எழுந்தார்.

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ்கொண்ட தமிழ்நாடு"


என்று கம்பீரமாகப் பாடிவிட்டுப் பேசினார் பாரதியார்: "திருக்குறள் தெய்வமான புஸ்தகம். சிறுவயதில் நான் அதைப் படித்திருக்கிறேன். இப்போது எல்லாம் மறந்து போனது. இரண்டொன்று நினைவிருக்கிறது. ஒன்று அழுத்தமாகச் சொல்லுகிறேன். பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை. ஆஹா! ஆஹா! எவ்வளவு பொருத்தமான வாக்கு. பொருள் இருந்தால் புகழ் கிடைக்கும். புகழ் இருந்தால் நம் இகழ்ச்சி தீருமே. ஆனால் இந்தப் பஞ்சை மக்கள், நம் இந்தியர் அரை வயிற்றுக் கஞ்சிக்குக்கூட வகையில்லாமல் தவிக்கிறார்களே! காரணம் என்ன? நமக்கு நாடுண்டு, நல்ல வளமுண்டு. இருந்துமென்ன? பிரிட்டிஷ்காரன் அடிக்கிற கொள்ளை........." என்றதும், தலைமை ஆசிரியர் வைரக்கண்ணால் பார்த்து, "ஹூம், நோ பாலிடிக்ஸ் (அரசியல் கூடாது)" என்றார். உடனே பாரதியார், "கட்டுப்பாட்டில் நம்மால் பேச முடியாது. சுதந்திர இந்தியாவில் நாம் பேசிக்கொள்வோம். இத்துடன் சபையைக் கலைத்தோம்" என்று ஆவேசத்துடன் சொல்லிவிட்டு,

"என்று தணியும் இந்த
சுதந்திர தாகம்?"

என்று பாடிக்கொண்டே கவியரசர் இராஜ நடையில் வெளியே சென்றார். அன்றே அந்தப் பயந்தாங்கொள்ளி ஊரில் இருக்க மனமில்லாமல் மதுரைக்குப் பிரயாணமானார்.



[illegible] (பல் வைத்தியரிடம்):— டாக்டர் ஸார், எங்க அம்பிப்பயல் வீட்டு முற்றத்திலே விருந்து கீழே விழுந்து இரண்டு பல்லை உடைத்துக் கொண்டு விட்டான். அதுக்கு உங்க பல்லிலே இரண்டை விலைக்குத் தருவீர்களா? —நந்தன்.



துணிகள்பெட்டி அநேகமாய்
காலியாய் இருக்கிறது

துணிகள் பெட்டி அநேகமாய் காலியாய் இருக்கிறது. துணியோ அதிக விலை, கிடைப்பதும் கஷ்டம். ஆனாலும் யுத்தகால வாழ்க்கையின் கஷ்டங்களில் இது ஒன்று. ஆகாரவகைகளும் எரிபொருள்களும் இன்னும் கிராக்கியாய் இருக்கின்றன. வாழ்க்கை பூராவும் பிரசினைகளாக இருக்கின்றன. அது தான் வெற்றியின் விலை. ஆனால் தற்கால கஷ்டங்களின் பயனாக வாழ்வே முடியாது என்று தோன்றும் சமயம் உங்களை நிமிர்ந்திருக்க உதவ தயாராக ஒரு நேசன் இருக்கிறான். அதுதான் டீ. இன்னும் டீ கிரயமான விலையில் எப்பொழுது வேண்டுமானாலும் கிடைக்கிறது.. இந்த கஷ்ட காலங்களில் டீ ஒரு ஆசிர்வதிக்கத் தக்க சுகத்தை கொடுக்கிறது. கெடுதலனையிலே ஊக்குவிக்கிறது. அதன் விசேஷ குணங்களினால் பிரசினைகள் அதிக கஷ்டமில்லாமலும் கவலைகள் மிக முக்கியமற்றவையாயும் மாறி விடுகின்றன.



இந்தியன்

சோர்வடையும் சமயம் டீ அருந்துங்கள்

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது

IK 259 Tha



கம்பர் தரும் காட்சி

97. வந்தது வினைப்பயன்

ராமன் தண்டகாவனம் வந்து சேர்ந்ததைப் பார்த்தோம். தூரத்தில் ராமன் வருகிறான் என்பதை அறிந்த மாத்திரத்தில் என்றுமில்லாத சந்தோஷம் வந்துவிட்டது அங்குள்ள ரிஷிகளுக்கு. அந்தச் சந்தோஷத்தைப் பலவிதமாய் வர்ணிக்கலாம். ஆனாலும், அந்த ரிஷிகளின் மனப்பாங்கை ஒட்டி வர்ணித்தால்தான் அந்தச் சந்தோஷம் எத்தகையது என்று தெளிவாய்ச் சொன்னதாகும்.

அவர்களோ ரிஷிகள். சதா தியானத்தைப் பற்றியும் தத்துவ விசாரணையைப் பற்றியுமே படித்துக்கொண்டும், பேசிக்கொண்டும் இருப்பார்கள்.

எதற்காக? நாலா பக்கமும் நம்மைச் சூழ்ந்திருக்கிற ஆணவமாகிய சிறையை விட்டுக் கடப்பதற்காகத்தான். எந்தத் துறையில் இறங்கினாலும் ஆணவம் மதிள்ச் சுவர்மாதிரி எழுந்து நின்று முட்டுகிறது. அதை இலேசாகக் கடக்க முடியாது.

ஏதோ சிறகு இரண்டு முளைக்குமானால் அப்படியே மேலே பறந்து சிறையைக் கடந்து விடலாம்.

சிறகுகள் என்றால் என்ன? ஒன்று தியானம். இரண்டாவது தத்துவ ஆராய்ச்சி. இந்த இரண்டு சாதனங்களின் உதவியால் நம்மைச் சூழ்ந்துள்ள ஆணவத்தை விட்டு, விடுதலை பெற்று, முத்தி நிலையை அடைந்து விடலாம். அப்படி அடையும் ஆனந்தத்தை எடுத்துச் சொல்லவும் முடியுமா? முடியாது. இப்போது பாடலைப் பார்க்கலாம்:

தெரிந்(து)உற நோக்கினர், —
செய்த செய்தவம்
அருஞ்சிறப்(பு) உதவ, நல்
அறிவு கைதர,
விரிந்துறப் பற்றிய
பிறவி வெந்துயர்ப்
பெருஞ்சிறை விடுபெற்(று)
அனைய பெற்றியார்.

[தெரிந்து உற நோக்கினர்: ராமனது குணாதிசயங்களை நன்றாய்த் தெரிந்திருந்த காரணத்தால் தூரத்தே வரும் அந்த ராமனைக் கூர்ந்து நோக்கினார்கள் — பெருஞ் சிறை விடு பெற்றனைய பெற்றியார்: அருஞ்சிறப்பு உதவ: அரிய சாதன நிலையை அடையும்படி உதவ; அறிவு கைதர: ஆன்ம ஆராய்ச்சி காரணமாக உறுதி ஏற்பட; விரிந்து உறப் பற்றிய: எல்லா முயற்சிகளிலுமே நான்தான் செயல் செய்தேன் என்ற ஏகமயமான மயக்கம் ஒட்டியுள்ள; பிறவி வெந்துயர்: கடவுள் தத்துவம் வேறு நாம் வேறு என்று எண்ணும் மயக்கமும் அதனால் வரும் பெருந்துயரமும்; விடு: விடுதலை.]

இராமனைத் தூரத்தே வரக்கண்ட முனிவர்கள் என்ன செய்தார்கள்?

எழுந்தனர், ஓடினர்;
இருண்ட மேகத்தின்
கொழுந்தென நின்றஅக்
குரிசில் வீரனைப்

பொழிந்தெழு காதலிற்
பொருந்தி னார்,—அவன்
தொழுந்தொறும் தொழுந்தொறும்
ஆசி சொல்லுவார்.

[குரிசில் வீரனை: சக்கரவர்த்தி குமாரனை ராமனை; பொழிந்தெழு காதலில்: அன்பானது கண்ணீராய்ப் பொழிய; பொருந்தினார்: கிட்டினார்கள்; ஆசி சொல்லுவார்: வாழ்த்திக் கொண்டிருந்தனர்.

குறிப்பு: முனிவர்களுடைய ஆனந்தம் துள்ளித் துள்ளிப் பெருக்கெடுத்துப் போவதைச் செய்யுளின் ஓசையிலேயே பார்க்கலாம்.]

சௌகரியமான பர்ண சாலையில் ராமனை இருக்கச் செய்து விட்டுத் தங்களுக்கு வேறு ஜாகை பார்த்துக் கொள்ளுகிறார்கள் முனிவர்கள்.

இனியதோர் சாலைகொண்(டு)
ஏகி, 'இவ்வயின்
நனி உறை' என்(று)அவற்(கு)
அமைய நல்கித்,தாம்
தனி இடம் சேர்ந்தனர்,—
பின்னர்த் தாபதர்
அனைவரும் எய்தினர்
அல்லல் சொல்லுவான்.

[இவ்வயின்: இந்த இடத்தில்; நனி உறை என்று: சௌகரியமாகத் தங்கவேண்டும் என்று; அவற்கு அமைய நல்கி: ராமனுக்கு சௌகரியமாக அமைத்து விட்டு; பின்னர்த் தாபதர் அனைவரும்: சிறிது நேரம் கழித்து மற்றுள்ள எல்லா முனிவர்களும்; எய்தினர் அல்லல் சொல்லுவான்: தங்கள் கஷ்டங்களைச் சொல்லும் பொருட்டு ராமனிடம் வந்து சேர்ந்தார்கள்.]

வந்து சேர்ந்த முனிவர்களை ராமன் வணங்கி அவர்களுடைய வாழ்த்துரைகளை அனுபவித்தவனாய் உட்கார்ந்தான். உட்கார்ந்து "உங்கள் கட்டளை ஏதுவோ சொல்ல வேண்டும்" என்று ரிஷிகளைப் பார்த்துக் கேட்கிறான்.

எய்திய முனிவரை
இறைஞ்சி ஏந்துவந்(து)
ஐயனும் இருந்தனன்,
'அருள்என்' என்றலும்,—
'வையகம் காவலன்
மைந்த! வந்ததோர்
வெய்யவெம் கொடுந்தொழில்
விளைவு கேள்' என.

[இறைஞ்சி: வணங்கி; ஏந்து உவந்து: வாழ்த்துரைகளை அனுபவித்தவனாய்; அருள் என்: நீங்கள் இடும் கட்டளை ஏதுவோ; என்று ராமன் சொல்லவும்;—வையகம் காவலன் மைந்த: சக்கரவர்த்தித் திருமகனே; வந்ததோர் வெய்யவெம் கொடுந்தொழில் விளைவு: பூர்வத்தில் ஏதோ நாங்கள் செய்த மகா பாதகங்களினால் இப்போது நேர்ந்த கேடுகளை; கேள் என: செவி கொடுத்துக் கேட்க வேண்டும் என்று — முனிவர்கள் சொல்ல ஆரம்பிக்கிறார்கள்.]

முனிவர்களுக்கு வினைப் பயனால் சேர்ந்த துன்பம் அற்ப சொற்பமானது அல்ல. அது என்ன என்பதை அடுத்த இதழில் பார்க்கலாம்.

ஸ்டாலின் பாடுகிறார்!



1939-ம் வருஷம் ரஷ்யாவுக்கும் பின்லாந்துக்கும் கடுமையான யுத்தம் நடந்து கொண்டிருந்தது. தற்போது பின்லாந்தின் பிரதம மந்திரியா யிருக்கும் பாஸிகிவி, ரஷ்யாவுடன் சமாதான ஒப்பந்தம் செய்து கொள்வதற்காக மாஸ்கோவுக்குப் போனார். ஸ்டாலினுடன் சமாதான ஒப்பந்தத்தைப் பற்றிக் கலந்து பேசினார். ஸ்டாலின் விதித்த நிபந்தனைகள் அவருக்குப் பிடிக்கவில்லை. அவருக்கு மிக்க வேதனையா யிருந்தது. என்ன செய்வதென்று தெரியாமல் மயங்கினார். அவர் ஸ்டாலினைப் பார்த்து, "நாங்கள் ஒப்பந்தம் செய்து கொள்வதற்காகப் பின்லாந்திலிருந்து புறப்பட்ட போது, ஜனங்கள் கூட்டம் கூட்டமாகத் தெருக்களில் நின்று, பாட்டுப் பாடி உற்சாகமாக எங்களை வழியனுப்பி வைத்தார்கள். இந்த மாதிரியான சமாதானம் செய்து கொண்டு போனால், எங்களை எதிர்கொண்டு அழைப்பதற்கு யாரும் வரமாட்டார்களே!" என்று வருத்தத்துடன் கூறினார்.

ஸ்டாலின் சிரித்துக் கொண்டே, "பூ, இதற்காக ஏன் கவலைப்படுகிறீர்கள்? நானும் மலோடாவும் ஸ்டானுவும் பாட்டுப் பாடி உங்களை அனுப்பி வைக்கிறோம்!" என்றார்.

மாப்பிள்ளைகளே, உஷார்!

நாடோடி

[கல்யாணமாகாதவர்கள் கவனித்து வாசிக்க!]

தன்னைப்பற்றி நான் ஒரு கட்டுரை எழுதவேண்டும் என்பதற்காக என் நண்பர் ஒருவர் வெகு காலமாக என்னென்னமோ யுக்திகள் கையாண்டு வருகிறார்.

“என்ன ஸார்! எந்தெந்த மடையனைப் பற்றியோ கட்டுரைகள் எழுதுகிறீர்களே, நம்மைப் பற்றி ஒன்று எழுதக் கூடாதா?” என்று வாய்விட்டே கேட்பார் ஒரு சமயம்.

“டேய்! அவரிடம் ஏதாவது வாய் கொடுத்து வைக்காதே, அடுத்த வாரமே நம் இருவரைப் பற்றியும் கட்டுரை எழுதிச் சந்தி சிரிக்க வைத்துவிடுவார்” என்று தந்திரமாகத் தன் நண்பரிடம் சொல்லிப் பார்ப்பார் இன்னொரு சமயம்.

“ஸார்! நான் இப்பொழுதே சொல்லி விட்டேன். அடுத்த வீட்டு அண்ணாசாமி அய்யரை அம்பலத்துக்கு இழுத்ததுபோல் என்னையும் இழுத்தீர்களோ எனக்குக் கெட்ட கோபம் வந்து விடும்” என்று பயமுறுத்திப் பார்ப்பார் மற்றொரு சமயம்.

அவர் உருட்டலையும் மிரட்டலையும் கண்டு நான் இதுவரை மசியவில்லை. இதுவரை அவரைப் பற்றிக் கட்டுரையும் எழுதவில்லை.

இன்றோ, அவரைப் பற்றிக் கட்டாயம் எழுதித்தான் ஆகவேண்டும் என்ற நிர்ப்பந்தமான நிலைமை ஏற்பட்டுவிட்டது. நண்பன் என்ற முறையில் இந்த ஆபத்துச் சமயத்தில் கூட அவருக்கு நான் உதவாவிட்டால் உலகம் என்னை சிக்கிக்காதா? நீங்களே சொல்லுங்கள்!

பத்து வருஷங்களுக்கு முன்னர் நான் சொன்னதைக் கேட்டிருந்தால் அவருக்கு இத்தகைய ஆபத்து ஏற்பட்டிருக்காது. அந்தக் காலத்தில் அவருடைய பெற்றோர்கள், எத்தனையோ பெண் வீட்டுக்கு அவரைக் கூட்டிக் கொண்டு போனார்கள். படித்த பெண்கள், படிக்காத பெண்கள், நாட்டுப் பெண்கள், நகரத்துப் பெண்கள், சிவப்புப் பெண்கள், கறுப்புப் பெண்கள், பெரிய பெண்கள், சிறிய பெண்கள் ஆகிய எத்தனையோ விதப் பெண்களைக் காண்பித்தார்கள். ஆனால் அசட்டு மனுஷன் அவர்களில் ஒருவரையும் வேண்டாம் என்று சொல்லிவிட்டார்! பாவம், அத்தனை பெண் வீட்டுக்காரர்களுக்கும் பிள்ளை வீட்டாருக்காக ரயில் சத்தமும், காப்பி, டிபன் செலவும் செலவழித்ததுதான் மிச்சம்!

இத்தனை பெண்களையும் வேண்டாம் என்று ஒதுக்கித் தள்ளிவிட்ட நண்பர் குடுகுடு என்று ஓடிப்போய், யாரையும், கேட்காமல், கொள்ளாமல், ஒரு படித்த பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு விட்டார்! ஒரு மனுஷனுக்கு இதைவிடப் பேராபத்து வேறு என்ன வேண்டும், கேட்கின்றேன்.

நண்பரைக் குற்றம் சொல்லியும் பிரயோசனமில்லை. கொஞ்ச காலைக்கு முன்பாவது படித்த பெண்கள், படிக்காத பெண்கள் என்று இரண்டு கோஷ்டியினர் இருந்தனர். படித்த பெண்களைக் கண்டு பயப்பட்டவர்கள் படிக்காத பெண்களைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளலாம் என்ற சௌகரியம் இருந்தது. இப்பொழுது இந்தச் சௌகரியமும் போய்விட்டது. ‘படிக்காத பெண்கள்’ என்ற இனமே, பாவம், கவனிப்பாரற்றுப் பூண்டோடு அழிந்துவிட்டது.

எங்கு பார்த்தாலும் படித்த பெண்கள் தான் தோற்றமளிக்கிறார்கள். யார் வீட்டுக் கதவைத் தட்டினாலும் படித்த பெண்கள் தான் கதவைத் திறக்கிறார்கள். டிராமில் ஏறப்போனால் படித்த பெண்கள்தான் நம்மை முந்திக்கொண்டு ஏறுகிறார்கள். பஸ்களில் ஏறினால் படித்த பெண்கள்தான் நம்மிடத்தைப் பிடுங்கிக் கொள்கிறார்கள். ஆக, படித்த பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளத் தயாராக இல்லாதவர்கள் தங்கள் வாழ்நாளைப் பிரம்மச்சாரியாகவே கழிக்க வேண்டியதுதான்.

ஆகவே, சமீபத்தில் கல்யாணம் பண்ணிக் கொண்டவர்களுக்கும், இனிமேல் கல்யாணம் பண்ணிக்கொள்ளப் போகிறவர்களுக்கும், படித்த பெண்ணுடன் குடித்தனம் நடத்தும் விதம் தெரிந்திருக்க வேண்டியது மிகவும் அவசியம் அல்லவா?

என்னுடைய அனுபவத்தைக் கொண்டு, சமீபத்தில் கல்யாணம் ஆன மாப்பிள்ளைகளுக்கு நான் சொல்லக்கூடிய உபதேசம் என்னவென்றால், மாப்பிள்ளைகளே, உஷார்! என்பதே.

ஆம். மாப்பிள்ளைகளே, உஷார்! படித்த பெண்களுடன் குடித்தனம் பண்ணுவதே ஒரு தனிக் கலை. பழைய காலத்தில் நம் பெற்றோர்கள் குடித்தனம் பண்ணினார்களே அதைப் போலத்தானே என்று நினைத்தீர்களோ, வந்தது மோசம்!

பழைய காலத்தில், அதாவது படிக்காத பெண்களே குடும்பம் நடத்திவந்த காலத்தில், புருஷன் மனம் கோணாமல் நடப்பதே மனைவியின் கடமையாக இருந்தது. படித்த பெண்களுடன் குடித்தனம் நடத்த விரும்புகிறவர்கள் இதே பாடத்தைத் திருப்பிப் படித்தால்தான் அதாவது மனைவியின் மனம் கோணாமல் நடக்கத் தெரிந்து கொண்டால்தான் நிம்மதியாக இல்லற வாழ்க்கை நடத்தலாம்.

படித்த பெண்களுக்குச் சமையல் விஷயமாக ஒன்றும் தெரியாது என்ற அவதூறு வெகுவாக வழங்கி வருகிறது. இதைப் போல அபத்தம் வேறு ஒன்றும் கிடையாது. நான் சென்ற சில வருஷங்களாகச் சரசவுடன் குடித்தனம் நடத்தி வருகிறேன். உலகில் என்னென்ன சமையல் உண்டோ, அத்தனை வித சமையல்களைப் பற்றியும் சரசவுக்குத் தெரியும். ஒவ்வொரு கறி காயையும் என்னென்ன புது வழிகளில் பதார்த்தம் பண்ணலாம் என்பதும் அவளுக்குத் தெரியும். சமையல் விஷயமாகப் பத்திரிகைகளில் வரும் குறிப்புகள் அத்தனையையும் அவள் சேர்த்து வைத்திருக்கிறாள்.

வழக்கமாக நம் தாயார்கள் சமைத்துப் போட்டுச் சாப்பிட்டிருக்கும் சாப்பாட்டுக்கும், சரசு போன்ற படித்த பெண்கள் சமைத்துப் போடும் சாப்பாட்டுக்கும் சற்று வித்தியாசம் இருக்கத்தான் செய்யும். வித்தியாசத்துக்குக் காரணம், படித்த பெண்கள் சமையலில் வைடமின்கள் கெடாமல் இருப்பதுதான். பதார்த்தங்களில் வைடமின்கள் கெடாமல் அப்படியே இருக்க வேண்டுமானால், பதார்த்தங்கள் அதிகமாக வேகக் கூடாது என்று நான் சொல்ல வேண்டியதில்லை. வைடமினுடன் பதார்த்தங்களை உட்கொள்ளத் தெரியாதவர்கள் தயவு செய்து கல்யாணம் வேண்டாம் என்று இருந்து விடுங்கள். உங்களுக்கும் க்ஷேமம், படித்த பெண்களுக்கும் க்ஷேமம்.

படித்த பெண்களைக் கல்யாணம் பண்ணிக் கொண்டிருக்கும் மாப்பிள்ளைகள் அடுத்த படியாகத் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயம், பொதுவாக அன்னிய ஸ்திரீகளுடன் எப்படிப் பழகுவது என்பது.

பழையகால மாப்பிள்ளைகளுக்கோ என்றால் இத்தகைய ஆபத்து கிடையவே கிடையாது. அவர்கள் மனைவிமார்களைத் தேடிக் கொண்டு ஒருவரும் வரமாட்டார்கள். அப்படி வந்தாலும் புருஷர்களைக் கண்டதும் தலையைக் குனிந்து கொண்டு போய்விடுவார்கள்.


படித்த பெண்மணிகளைக் கல்யாணம் பண்ணிக்கொண்டிருக்கும் மாப்பிள்ளைகளே,



ஆண் காக்கை (பெண் காக்கையிடம்):— அடி பைத்தியமே! இது சிலையல்ல; பஸ்ஸுக்காகக் காத்திருக்கும் பிரயாணி யல்லவா?

உஷார்! உங்கள் மனைவியைத் தேடிக் கொண்டு தினம் பத்து படித்த பெண்களாவது உங்கள் வீட்டுக்கு வருவார்கள். அவர்கள் தலை குனிய மாட்டார்கள் என்பது மட்டும் அல்ல, தங்களைக் கண்டு நாம் தலை குனிந்தாலும் எளனமாக நினைப்பார்கள். நாமும் ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு அவர்களுடன் பழகவேண்டும். அப்படிப் பழகும் போது, ரொம்ப அலட்சியமாகவும் பழகிவிடக்கூடாது. கெக்கே, பிக்கே என்றும் பழகக் கூடாது. ஊசி முனையில் நடப்பது போல் வெகுஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

ஞாபக முடிச்சு !



“எதற்காக இந்த ‘முடிச்சைப் போட்டுக் கொண்டேன்? அடடா! மறந்து போய் விட்டதே!”

நல்ல தையற்காரன் இருக்கிறானா என்று கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். அந்தத் தையற்காரனுக்கும் தினம் ஒரு புது மோஸ்தரில் ஜாக்கெட் தைக்கத் தெரியுமா என்பதையும் விசாரித்து வைத்துக் கொள்ளுங்கள்.

தையற்காரன் கடை இருக்கும் இடத்தைத் தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். நீங்கள் காரியாலயத்திலிருந்து திரும்பி வரும் போது, வீடு பூட்டப் பட்டிருந்தால், மனைவியைக் கண்டு பிடித்து வீட்டுச் சாவியை வாங்கிக்கொண்டு வருவதற்காகத்தான்.

இதுவிஷயம் மிகவும் கஷ்டம்தான். சரசுவைத் தேடி வரும் படித்த பெண்களால் எனக்கும், சரசுவுக்கும் எத்தனையோ தடவை சண்டை உண்டாகி யிருக்கிறது. ஒரு பெண்ணுடன் அதிகம் பேசிவிட்டேன் என்பாள், ஒரு பெண்ணுடன் சரியாகப் பேசாமல் விட்டுவிட்டேன் என்பாள்.

இந்தத் தொல்லையெல்லாம் வேண்டாம் என்றுதான் பழைய காலத்தில் புருஷர்களும் ஸ்திரீகளும் அதிகமாகப் பழகக் கூடாது என்று வைத்திருந்தார்கள். இதை இந்தப் படித்த பெண்கள் கேட்டால்தானே?

கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது பழைய காலப் பழமொழி. பழைய காலத்து ஸ்திரீகளுக்கு என்றே ஏற்பட்ட பழமொழி என்று சொன்னாலும் மிகையாகாது. பழையகாலத்து ஸ்திரீகள் ஒருவரை யொருவர் சந்தித்துக் கொள்வதற்காகக் கோயிலுக்குப் போவது என்று வைத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், படித்த பெண்கள் ஒரு புதுமொழியைக் கையாளுகிறார்கள். “[illegible]” என்பதுதான் அது.

மாப்பிள்ளைகளே! உத்தியோக மாற்றலாக நீங்கள் எந்த ஊருக்குச் செல்ல வேண்டியிருந்தாலும் சரி, அந்த ஊரில்

படித்த பெண்கள் புடவைகள் வாங்கும் விஷயத்தைப் பற்றி ரொம்ப பேருக்குத் தப்பபிப்பிராயம் இருக்கிறது. படித்த பெண்கள் ஏகத்தாராகப் புடவையில் பணத்தைக் கொட்டிக் கொண்டிருப்பார்கள் என்றும், அதற்குப் புருஷர்கள் உடந்தையாக இருக்க வேண்டும் என்றும் பலர் நினைத்துக் கொண்டிருக்கின்றனர். இதைப் போல அபத்தமான அபிப்பிராயம் வேறு ஒன்றும் கிடையாது.

படித்த பெண்களின் புடவையின் விலை ஒரு காலத்திலும் பத்து ரூபாய்க்கு மேல் போகாது. பழைய காலத்துப் பெண்கள் நூறு, இருநூறு போட்டுப் புடவை வாங்கிப் பெட்டியில் வைப்பதற்குப் பதில், இவர்கள் பத்து, பத்து ரூபாயாக இருபது புடவைகள் வாங்கிப் பீரோவில் அடுக்கி வைப்பார்கள். ஆக, புடவைச் செலவு இரண்டு பேர் விஷயத்திலும் ஒன்றுதான். ஆனால் ஒன்று, படித்த பெண்கள் ஒரு புடவை வாங்குவதற்கு ஒன்பது கடை கடைக்குப் போவார்களாதலால் புடவை வாங்குவதற்கு ஏற்படும் வண்டிச் சத்தம் புடவையின் விலையை விட அதிகமாகி விடும். இன்னும்.........

இத்துடன் கட்டுரை முடிவதை நேயர்கள் மன்னிக்க! மீதிக் கட்டுரை ஸ்ரீமதி அநுவின் கையில் அகப்பட்டுச் சுக்கு நூறாகி விட்டது!

சென்ற இதழில் வெளியான காலக்ஷேபத் துணுக்குக்குப் பரிசு பெற்றவர்: ஜி. சுவாமிநாதன், நெ. 70, கீழ 3-ம் தெரு, மன்னார்குடி.



ஸங்கீத வித்வான்
கும்பகோணம்
ஏ. டி. சுல்தான்

தங்க மெடல்கள்

குடந்தை மகாமகம் ஸ்வதேசி பொருட் காட்சி (1945) யாலும், வாணி விலாஸ சபா காரியதரிசி ஸ்ரீ எஸ். ரங்கசாமி அய்யங்கார் பி. ஏ. (ரிக்கா) அவர்களாலும் அளிக்கப் பட்டன.

29-3-45 பாலக்காட்டில் நடந்த கச்சேரியில் ஸ்ரீ செம்பை வைத்தியநாத பாகவதர் அவர்கள் மேற்படி வித்வானுடைய கச்சேரி சம்பிரதாயப்படி இருந்ததைப் புகழ்ந்து வெகு நேரம் பேசி மாலை சூட்டி தங்க மெடல் பரிசு அளித்தார்.

குடந்தை அட்வகேட், மகாமகம் பொருட் காட்சி காரியதரிசி, முனிசிபல் கவுன்சிலர், ஸ்ரீ சி. எஸ். ஆராவமுத அய்யங்கார், பி. ஏ., பி. எல்., எழுதுவதாவது :—

"தென்னாட்டில் கர்னாடக சங்கீதத்தில் மிகத் திறமையுடன் விளங்கும் இளம் பிராயமுள்ள ஸங்கீத வித்வான் ஏ. டி. சுல்தான் அவர்கள். அவருடைய வார்த்தை உச்சரிப்பு சுத்தத்துடனும் சம்பிரதாய முறையோடும் திறம்பட இருக்கிறது. ஸங்கீத உலகில் முன்னேறி புகழ்பெற பிரார்த்திக்கிறேன்."



அது மிகவும் குளிர்ச்சியாக இருக்கிறதல்லவா!

... ஆம். களைப்பையும் போக்குகிறது!

... அதுமட்டுமா — ஆனந்தத்தையும் அளிக்கிறது!

தினசரி விநோலியா சோப்பை உபயோகித்து சுகத்தை விரும்பும் மனிதர்களைக் கேளுங்கள். அவர்கள் இது மிகவும் ஆச்சர்யமாக சுகமளிக்கும் என்றும், கோடைகாலத்தில் ஓர் சிறந்த வரம் போன்றதென்றும் சொல்லுவார்கள். அதனுடைய வெண்மையான நுரை குளிர்ச்சியையும், மலர்ச்சியையும் கொடுக்கிறது. அதனுடைய பிரத்தியேகமான வாசனை குதூகலத்தை அளிக்கிறது. மிகவும் களைப்படைந்த நரம்புகளுக்கு உத்ஸாகத்தை ஊட்டுகிறது.



விநோலியா ஒயிட் ரோஸ் ஸோப்பு

PWR. 18-60 TM VINOLIA CO., LIMITED, LONDON, ENGLAND


சினிமா நட்சத்திரங்களைப் போல, நீங்களும்
உங்கள் சருமத்தைக் காப்பாற்றுங்கள்!
மனோரமா
என்னுடைய சருமம் எப்பொழுதும் இளமை யாகவும், ஆரோக்கியமாகவும் இருக்கிறதற்கு பொறுப்பான லக்ஸ் டாய்லெட் சோப்பிற்கு நான் நன்றி செலுத்துகிறேன் என்று மனோரமா கூறுகிறார். எல்லா இந்திய சினிமா நட்சத்திரங்களைப் போல இவர் இந்த உயர்ந்த சோப்பைத் தவறாமல் உபயோகிக்கிறார். மேலும் அவர் சொல்லுகிறார் "லக்ஸ் டாய்லெட் சோப் நன் முறையினால் சருமத்தை மாசில்லாமல் வைத்துக் கொள்வது அதிசயமாயிருக்கிறது"
TOILET SOAP
LUX
லக்ஸ் டாய்லெட் ஸோப்
LEVER BROTHERS (INDIA) LIMITED

கல்கி



KALKI ஏப்ரல் 15, 1945 4 அணா



ஜுரத்தில்

உஷ்ணம் 102 டிக்ரிக்கு மேலே போனால், உங்கள் கூந்தல் உதிர்வது நிச்சயம். அம்மையானாலும் சரி, 'டைபாயிட்' 'மலேரியா' 'இன்புளுயன்ஸா' முதலிய விஷ ஜுரங்களானாலும் சரி, சூடு காரணமாகவே மயிர் அபரிமிதமாகக் கொட்டுகிறது. ஜுர ஸமயங்களில் உஷ்ணம் அதிகமாக ஏறா விடினும், மயிர் உதிர்வது மட்டும் தவறுவதே யில்லை. அப்படி உதிரும்போது தக்க சிகிச்சை செய்து தடுக்காம லிருந்து விட்டால், மயிர் விடாமல் உதிர்ந்து தலையும் வழுக்கையாய் விடும்.

வெள்ளம் வந்த பிறகு அணைபோடுவதேன்? மயிர் உதிர ஆரம்பிக்கு முன்னரே, கூந்தலைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள். ஜுரத்துக்குப் பிறகு கேசம் அரை பங்கு கால் பங்காகிக் குறைந்து விட்டால், கேசவர்த்தினியைக் கொண்டு கேசத்தை விருத்தி செய்து பூர்ணமாக்கிக் கொள்ளுங்கள். கடைசியாக எல்லாப் பரீக்ஷைகளும் செய்தான பிறகு கேசவர்த்தினியே கூந்தலுக்குச் சிறந்தது என்று தெரிய வந்தால், கேசவர்த்தினியை முதலிலேயே கைக்கொள்ளலாமே?

கேசவர்த்தினி

கூந்தலைப் பாதுகாப்பது, விருத்தி செய்வது, அழகு படுத்துவது.

விலை அணா 12.

(மேற் செலவு வேறு)

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பவர்:

தென் இந்திய ரஸாயனசாலை

ஆர். எஸ். புரம், கோயமுத்தூர்.

தி இந்தியன் பாங்க் லிமிடெட்.

★

தலைமை ஆபீஸ்:

"இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்"

வடக்கு பீச் ரோடு, மதராஸ்

★

லோகல் ஆபீஸ்கள்:

எஸ்பிளனேட், திருவல்லிக்கேணி, மவுண்டு ரோடு, மயிலாப்பூர், தியாகராய நகர், புரசவாக்கம்.

சென்னை மாகாணத்தில் எல்லா முக்கியமான இடங்களிலும், பம்பாயிலும் பிராஞ்சுகளும் சப் ஆபீஸ்களும் உள்ளன.

★

வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	ரூ.	60,00,000
செலுத்தப்பட்ட மூலதனம்	ரூ.	33,55,946
ரிஸர்வ் நிதி	ரூ.	33,00,000


டெபாஸிட்டுகள் ரூ. 10½ கோடிக்கு அதிகம்

★

சகலவிதமான பாங்க் அலுவல்களும் நடத்தப்படும். மற்ற விவரங்களுக்குப் பாங்கியின் எந்த ஆபீஸுக்காவது எழுதி தெரிந்து கொள்ளலாம்.

N. கோபால அய்யர்
செக்ரடரி.

Regd. No. M 4392



Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras.